905

NEW CENTURY TAMIL STORY READER

SECOND READER

இரண்டாவது கதா வாசக புஸ்தகம்

BY

T. A. RAJARUTHNAM PILLAI

MADRAS. 1914

…RATURE SOCIETY FOR INDIA
…oad, Calcutta and Colombo

P.31-2
M14
77697

NEW CENTURY TAMIL STORY READER

SECOND READER

இரண்டாவது

கதா வாசக புஸ்தகம்

BY

T. A. RAJARUTHNAM PILLAI

1914
MADRAS.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS, ALLAHABAD, CALCUTTA AND COLOMBO

1914

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

1914

77697

முகவுரை

தமிழ் கற்கும் மாணுக்கர் அப்பாஷையை விரும்பிக் கற்று மிக வும் விருத்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடு இத்தொடர்ப் புஸ்தகங்களை நவீனமாய் இயற்றி வெளியிட்டிருக்கின்றோம். இவற்றி லுள்ள பாடங்கள் பெரும்பாலும் கதைகளாயிருப்பதால் இத்தொடர்ப் புஸ்தகங்களுக்குக் கதா வாசக புஸ்தகத் தொடர் என்று பெயரிடப்பட் டிருக்கின்றது. இவை முற்றிலும் புதிய முறையாய் எழுதப்பட்டவை. இவற்றில் பெரும்பாலும் மாணுக்கர் மனதை வசீகரித்து நல்லறிவுறுத் தும் நீதிக்கதைகளும், சிற்சில பொருட்பாடங்களும், சுகாதாரம், பூமி சாஸ்திரம், இதிகாசம், ராஜாங்கமுறை முதலியவற்றைக்குறித்த விஷ யங்களும், சுலபமாயும் உல்லாசமாயும் பாடக்கூடிய இசைப்பாட்டுக் களும், இத்தேசத்துச் சிறுவர் சிறுமிகள் சாதாரணமாய் வீடுகளில் பாடி ஆடும் போஷணசாலைப் பாடல்கள் (Nursery Rhymes) என்று சொல்லப்படுகிற விநோத பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பாட புஸ்தகங்களில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலிய நீதி நூல்களிலுள்ள பாடல்களை உபயோகிப்பதே பெருவழக்காயினும் நாம் அம்முறை யைப் பெரிதும் கைக்கொள்ளாது இயன்றமட்டும் நீதிக்கதைகளைப் பாடல்களாக அமைத்துள்ளோம். ஆயினும் நம் தமிழ்நாட்டில் மேற் கூறிய ஔவை பாடல் முதலிய நூல்கள் மிகவும் சிரேஷ்டமாய் எண் ணப்படுதலானும், அவை சிறந்த நீதியைப் புகட்டுதலானும் அவ் வழக்கத்தை முற்றிலும் நீக்காது மாணுக்கர் சக்திக்கேற்றபடி அவற் றிலிருந்தும் சில பாடல்களைச் சேர்த்துள்ளோம்.

ராஜ விசுவாசம் நம்மனோரிடத்தில் இருக்கவேண்டிய விசேஷ லக்ஷணம். அது வளருவதற்கேற்ற விதையைப் பாலியர் மனதில் விதைத்தால்தான் தக்க காலத்தில் பயன் தருமெனக் கருதி, ராஜ விசு வாசத்தை யுண்டாக்கத்தக்க சில கதைகளையும் ராஜ வாழ்த்துப் பாடல் களையும் இடையிடையே அமைத்திருக்கின்றோம்.

இவைதன்றி நமது ராஜாவுடைய சாயல் மாணுக்கருடைய மனதில் நன்ருய்ப பதியும்வண்ணம் அவர் ராஜரீகவுடைதரித்து ராஜ சின்னங்கள் துலங்க, கிரீடதாரியாய் நிற்கும் பாவனையாய்ப் பல வர்ணந் தீட்டப்பெற்ற ஓர் அழகிய படத்தை இத்தொடர்ப் பாட புஸ்தகங்கள் ஒவ்வொன்றின் முகப்பிலும் சேர்த்துள்ளோம். ஈசன் இறைவனைக் காக்க.

ஏறக்குறைய இத்தொடர்ப் புஸ்தகங்களில் காணப்படும் படங்கள் யாவும் இவைக்கென்றே புதிதாய்ச் செய்யப்பட்டவை. சில பாடங்களுக்கு இரண்டு படங்கள் அமைத்துள்ளோம். ஆகையால் உபாத்தியாயர் ஒரு பாடத்தை ஆரம்பிக்க முன்னரே பிள்ளைகள் படத்தைப் பார்க்கும்படி செய்து கேள்விகளின் மூலமாய்ப் பாடத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகள் தம் வாயால் சொல்லும்படி செய்தல்வேண்டும். பிறகு பாடத்தை விபரமாய் உபாத்தியாயர் விளக்கிக் காட்டலாகும். பாடங்களில் எடுத்தாளப்பட்டுள்ள கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிறந்த நீதியைக் கற்பிப்பதால் இத்தொடர்ப் புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் நீதி கதா சங்கிரகம் என்றலும் பொருந்தும். பெரியோரைப் பேணுதல், பெற்ரோரைக் கனம்பண்ணுதல், பொய்யாமை, இன்சொல்மொழிதல், தீமைசெய்யாமை, அன்புடைமை, ஜீவகாருண்யம், ராஜபக்தி, சகோதர ஐக்யம், முயற்சியின் பயன் முதலிய விஷயங்கள் கதா ரூபமாகத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. மிக்க விரைவாய் எழுதி அச்சிட்டு வெளிவரும் இப்புஸ்தகங்களில் குறைவுகள் இருப்பது இயல்பே. ஆயினும்,

'குற்றம் களைந்து குணங்கொள்வ தெஞ்ஞான்றும்
கற்றறிந் தோர்தங் கடன்'

ஆகலின், கற்றுணர்ந்த பெரியோர் நல்வரவு கூறி அங்கிகரிப்பரென் றெதிர்பார்க்கின்ரோம்.

T. A. R.

அட்டவணை—CONTENTS

பாடம்.		பக்கம்.
1.	கிழவனும் கழுதையும். The Old Man and the Ass...	1
2.	காக்கையும் நரியும். The Crow and the Fox	4
3.	ஔவையின் வாழ்த்துதல். The Blessings of Auvei, the Poetess	7
4.	கழுதையும் நிழலும். The Ass and the Shadow ...	9
5.	மோசம் நாசம். Deceit brings ruin	11
6.	யானை கண்ட குருடர். The Blind Men and the Elephant...	14
7.	காணமற்போன மோதிரம். The Lost Ring ...	15
8.	சாதாரண பழமொழிகள். Common Proverbs ...	18
9.	சுகத்தைப் பேணும் முறை. How to preserve health.	19
10.	வைக்கோலின்மேல் படுத்திருந்த நாய். The Dog in the Manger	21
11.	பத்துப் பொற் பிரமாணங்கள். Ten Golden Rules...	24
12.	ஔவை பாடல். Poetry	25
13.	வழக்காடுதல் The Evils of Lawsuit	26
14.	சிறுவரும் குருவிக்கூடும். The Boys and the Bird's Nest	29
15.	மாதுரு பத்தி. Duty to the Mother	31
16.	குதிரை The Horse	33
17.	நற்புத்தி புகட்டிய பிரபு. The Noble man that taught a good lesson	36
18.	சிங்கமும் எருதுகளும். The Lion and the Oxen ...	39
19.	ஔவை பாடல். Poetry	42
20.	இரண்டு தேனீக்கள். The Two Bees	43

பாடம். பக்கம்.

21. அரசன் வேண்டுமென்ற தவளைகள். The Frogs that wanted a King 45
22. அரசிறை. Taxes 47
23. ஏழாம் எட்வர்ட் அரசர். King Edward the Seventh 50
24. மாடாட்டியும் பெருமாள் மாடும். The Bull-player and the Perumal Bull 53
25. கிளிப்பிள்ளையால் மோசம்போனது. Deceived by a Parrot 55
26. பொருளாசையை நீக்கல். Abandoning desire for Wealth 58
27. சிறுவனும் மைனுக் குஞ்சுகளும் The Little Boy and the Mina Birds 60
28. புலி. The Tiger 64
29. சங்கீத வித்துவானுக்குச் சூடுபோட்டது. The Singer Branded 67
30. தொத்து நோய்களைத் தடுப்பதெப்படி? How to prevent Contagious Diseases? 69
31. அக்பர் சக்கரவர்த்தி. Emperor Akbar 72
32. ஈஸ்வர பக்தி. Poetry 75
33. மதுரை. The City of Madura 76
34. பருத்திச் செடி. Cotton Tree 79
35. மூடத்தனம் மிகுந்த காக்கை. Foolish Crow... ... 82
36 நீல நரி. Blue Jackal 85
37. ஈசன் இறைவனைக் காக்க. God Save the King ... 88

இரண்டாவது

கதா வாசக புஸ்தகம்

1. சூரியன் குஞ்சு

1. ஒரு கிராமத்தில் வாசஞ்செய்த ஒரு குடியானவன் பட்டணத்தில் வசித்துக்கொண்டிருந்த முருகேசன் என்னும் அவன் மைத்துன

ளைப் பார்க்கப் போனான். தன் மைத்துனன் வருவதைத் தூரத்திலேயிருந்து கண்ட முருகேசன் அவனை எதிர்கொண்டு சென்று 'மைத்துனரே! வாரும்: க்ஷேமமாய் இருக்கிறீரா? பெண்சாதி பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்?" என்று விசாரித்தான்.

2. பிறகு சிறிதுநேரம் அவனோடு பேசிக்கொண்டிருந்து விட்டு முருகேசன் தன் வேலைக்குப் போய்விட்டான். வீட்டிலிருந்த அவன் மனைவியும் மக்களும் குடியானவனுக்கு வேண்டிய உபசாரம் யாவும் செய்தார்கள்.

3. சாயங்காலம் முருகேசன் வீட்டுக்குத் திரும்பினவுடன் தன் மைத்துனனாகிய குடியானவனிடத்தில் பின்னும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தான். குடியானவனுக்கோ முருகேசன் வீட்டில் இருப்பவைகள் யாவும் புதுமையாய்க் காணப்பட்டன.

4. இப்படியிருக்க, முருகேசன் மனைவி பல விதமான பதார்த்தங்களையெல்லாம் தயார் செய்து இருவரையும் போஜனத்துக்கு வரும்படி அழைத்தாள். அப்படியே முருகேசனும் அவன் மைத்துனனும் போஜனம்செய்யப் போய் உட்கார்ந்தார்கள்.

5. அச்சமயத்தில் வீட்டுச் சுவரிலுள்ள மாடத்தில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. வீடெல்லாம் வெளிச்சமாயிருப்பதையும் மாடத்தில் விளக்கெரிவதையும் குடியானவன் கண்டு தனக்குள்ளே ஆச்சரியமடைந்தான். பிறகு

மைத்துனனைப் பார்த்து 'இப்படி வெளிச்சம் தருகிற இந்த வஸ்து என்ன?' என்று கேட்டான்.

6. முருகேசன் அவனுடைய பேதைமையை அறிந்துகொண்டு, ஐயா, மைத்துனரே! 'இது தான் சூரியன் குஞ்சு; இதை வெளியூர்களிலிருந்து இங்கே கொண்டுவந்து விற்கிறார்கள்' என்றான். குடியானவனும் 'அப்படியா?' என்று சொல்லிச் சும்மா இருந்துவிட்டான்.

7. பிறகு எல்லாரும் படுத்துக்கொண்டபின் குடியானவன் மெல்ல எழுந்துபோய் மாடத்தில் எரிந்துகொண்டிருந்த விளக்கை எடுத்து வீட்டுக் கூரையில் ஒளித்துவைத்துவிட்டு வந்து படுத்துக்கொண்டான். அவ்வீடு வைக்கோற் கூரை வீடாகையால் உடனே நெருப்புப் பற்றி எரிந்து சாம்பலாய்ப் போயிற்று.

8. முருகேசனும் மனைவியும் விழித்துக் கொண்டு உயிர் பிழைக்கும்படி பக்கத்து வீட்டுக்கு ஓடிப்போனார்கள். தங்கள் சொத்தெல்லாம் நஷ்டமாய்ப் போனதைக்குறித்து மிகவும் விசனப் பட்டார்கள்.

9. அதிகாலையில் முருகேசன் ஒரு குச்சியை எடுத்துச் சாம்பலைக் கிளறி வீட்டுச் சாமானில் ஏதாவது அகப்படுமோவென்று பார்த்துக்கொண்டிருந்தான். குடியானவனும் ஒரு குச்சியை எடுத்து ஏதோ தேடிக்கொண்டிருந்

தான். அப்பொழுது முருகேசன் 'மைத்துனரே! என்ன தேடுகிறீர்?' என்றான். அதற்கு அவன்: 'நான் இராத்திரிச் சூரியன் குஞ்சை எடுத்துக் கூரையில் பத்திரப்படுத்திவைத்தேன். அதைத் தேடுகிறேன்' என்றான். வீடு எரிந்ததற்கு இவனே காரணம் என்று முருகேசன் அறிந்து கொண்டு அவனை அடித்துத் துரத்திவிட்டான்.

'மூடர் உறவு முழுதும் அபாயம்.'

2. எப்பொழுதும் உண்மையைப் பேசு

1. ஜார்ஜ் உவாஷிங்டன் என்னும் சேனைபதி சிறுவராயிருந்தபோது அவர் தகப்பனருடைய சிநேகிதர் ஒருவர் அவருக்கு ஒரு கோடரியை இனமாகக் கொடுத்தார். அந்தக் கோடரி கையில் கிடைத்தவுடன் அவர் அதைக்கொண்டு தமக்கு எதிர்ப்பட்ட எதையும் வெட்டிக்கொண்டே வந்தார். கடைசியில் தோட்டத்தில் புகுந்து தன் தகப்பனர் மிகவும் அருமையாய் வளர்த்த செடி யொன்றை வெட்டிப்போட்டார்.

2. மறுநாள் காலையில் தகப்பனர் தோட்டத்தில் உலாவிக்கொண்டு வரும்போது தான் அருமையாய் வளர்த்த செடி வெட்டுண்டு காய்ந்து போய்க் கிடப்பதைக் கண்டார். ஐயோ! அவருக்கிருந்த துயரத்திற்கு அளவில்லை.

3. உடனே அவர் வீட்டுக்குப் போய்த் தோட்டக்காரர் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு 'அச்

செடியை வெட்டினது யார்?' என்று கேட்டார். அவர்கள் தங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். பிறகு தன் மனைவியைக் கேட்டார். அவளும் அப்படியே சொல்லிவிட்டாள்.

4. இச்சமயத்தில் அவருடைய குமாரனாகிய சிறுவர் கோடரியைக் கையிற் பிடித்துக்கொண்டு அங்கு வந்தார். அப்பொழுது தகப்பன் மகனைச் செடியின் கிட்ட அழைத்துக்கொண்டு போய் அதைக் காண்பித்து, 'மகனே! நான் மிகவும் அருமையாய் வளர்த்த இச்செடியை வெட்டினது யார்?' என்று கேட்டார்.

5. உடனே மகன் உள்ளம் பதைத்து 'அப்பா! நான் பொய் சொல்லமாட்டேன்! நான் பொய் சொல்லமாட்டேன்! அச்செடியை வெட்டினவன் நான்தான்' என்றார்.

6. அதைக் கேட்ட தகப்பன் மகனைத் தழுவிக்கொண்டு 'அப்பனே! நீ உண்மையைப் பேசியது என் மனதை மகிழச்செய்தது. இப்படிப்பட்ட ஆயிரம் செடிகளைக்காட்டிலும் நீ பேசின உண்மையே விசேஷமானது' என்றார்.

7. சிறு பிள்ளைகளே! நீங்களும் எப்பொழுதும் உண்மையையே பேசவேண்டும். ஒருபொழுதும் பொய் பேசவேண்டாம்.

'எப்பொழுதும் உண்மையையே பேசு.'



3. சுண்டெலிக்குஞ்சு

1. ஒருவனுடைய வீட்டிலே போஜனபதார்த்தங்களை வைப்பதற்குச் சுவரில் ஒரு மாடம் இருந்தது. அந்த மாடத்தில் பலவிதமான ருசிகரமான பதார்த்தங்கள் இருந்தன.

2. அம்மாடத்திற்குப் பக்கத்தில் இருந்த ஒரு புத்தில் ஒரு சிறிய சுண்டெலிக்குஞ்சு தன் தாயுடன் வசித்துக்கொண்டிருந்தது.

3. சுண்டெலிக்கு அப்படிப்பட்ட சௌக்கியமும் பத்திரமுமான இடம் ஒருபோதும் கிடையாது. எப்பொழுதும் அங்கும் இங்கும் ஓடியாடித் திரிகிறதே அந்தக் குஞ்சுக்கு அதிக பிரியம்.

4. ஒருநாள் போஜனமானபின் அச்சுண்டெலி வழக்கம்போல ஆடிவிட்டு மிக்க சந்தோஷத்துடன் தன் வளைக்குத் திரும்பிற்று. உட

னே தாய் அச்சுண்டெலியைப் பார்த்து 'மகனே! இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்? உன்னைத் தேடித் தேடி மிகவும் கஷ்டப்பட்டேனே' என்றது.

5. அதற்குக் குஞ்சு "அம்மா! நான் எங்கும் போகவில்லை. இந்த வீட்டிலுள்ள பல விநோதங்களையும் பார்த்து வந்தேன். அவைகளைப் பற்றி விபரிக்க என்னால் முடியவில்லை' என்றது.

6. பிறகு தாயைப்பார்த்து 'அம்மா! அதோ பார், ஒரு அழகிய வீடு இருக்கிறது. அவ்வீட்டிற்கு நாலுபுறமும் இரும்புக் கம்பிச்சுவர் வைத்திருக்கிறது. கீழும் மேலும் மரத்தினால் தளம் போட்டிருக்கிறது. நாம் வேண்டும்போது வெளியே போகவும் வரவும் தக்கதாய்ச் சிறு வாயிலும் இருக்கிறது. இதற்குள் நாம் வசித்தால் நம்முடைய பழைய சத்துராதியாகிய பூனை நம்மை என்ன செய்யக்கூடும்?' என்றது.

7. உடனே தாய் 'அடா மூடனே! நீ கண்டது வீடல்ல. நம்மைப் பிடிப்பதற்காக ஏற்றி வைத்த பொறி. நாம் அதற்குள் போனால் நீ சொன்ன சிறு வாயில் மூடிக்கொள்ளும். பிறகு நீ வெளியே வரமாட்டாய். வீட்டுக்காரன் வந்து உன்னை அடித்துக் கொல்லுவான்; ஆகையால் மகனே! நீ அந்த வீட்டிற்குக் கிட்டவும் போகாதே' என்று நற்புத்தி சொல்லிற்று.

8. மூடத்தனம் மிகுந்த அச்சுண்டெலிக் குஞ்சோ தாயினுடைய புத்திமதியைக் கவனியாது மெல்ல மெல்லக் கிட்டப் போயிற்று. பொ

றிக்குள் வைக்கப்பட்டிருந்த இரையைக் கண்டு உள்ளே சென்றது; அகப்பட்டுக்கொண்டது.

9. மறுநாள் வீட்டுக்காரன் அச்சுண்டெலியைத் தடியால் அடித்துக் கொன்றான்.

பிள்ளைகளே பெரியோர் சொல்லும் புத்திமதியைக் கேட்டு நடவுங்கள்.

'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.'

4. ராஜனை வாழ்த்துதல்

பல்லவி

எங்கள் சீமை மகராஜன்
எங்கும் புகழ்கொண்ட குணசீலன்.

அ னு ப ல் ல வி

1. இன்பம தாய்த்தெய்வ பத்திதயை
அன் புடனே ஆண்டுவரும்— எங்.

2. மன்னவனும் ஜார்ஜ் மகிபன்
மாண்பொ டோங்கிடு மாநேசன்— எங்.

3. மன்னர் தொழும் மதிவாணன்
மகிதல அதிபதி மணியாவோன்— எங்.

4. ஆங்கில நாட் டருமணியாய்ப்
பாங் குடனே ஓங்குகின்ற— எங்.

5. சீர்பெறு நல் அரசனவன்
சீர்த்திகள் செப்பி வாழ்த்திடுவோம்— எங்.



5. நாய்

1. நாயானது நாம் சாதாரணமாய் வீட்டிலே வளர்க்கும் மிருகம். அது மிகவும் அறிவுள்ளது. யாராவது அதற்கு நன்மையையா

வது கெடுதியையாவது செய்தால் அது அவை களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் இயல் புடையது.

2. அது விழிப்பும் உண்மையுமுள்ள மிருக மாய் இருப்பதினால் தன் எசமானுடைய பொ ருளை மிகவும் பத்திரமாய்க் காவல் செய்யும். இரவில் திருடராவது தனக்குத் தெரியாத வேறு யாராவது வீட்டுக்கு வந்தால் அது உடனே குலைத்துத் தன் எசமானுக்குத் தெரியப்படுத் தும். அது அப்படிக் குலைப்பது திருடனை நோக்கி 'அடா திருடா! நீ என் இங்கு வந் தாய்' என்று அதட்டுவதுபோலிருக்கும்.

3. நாய் தன் எசமானுடைய சத்தத்தையா வது, முகக்குறிப்பையாவது தெரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளும். அதட் டினால் அது காலின்கீழ் வந்து படுத்துக் கொள்ளும்.

4. நாம் சாப்பிடும் ஆகாரம் அதற்கு வேண்டியிருந்தால் உடனே அது அவ்வாகாரத் தைக் குறிப்பாய்ப் பார்த்து வாலை ஆட்டித் தன் விருப்பத்தைத் தெரிவிக்கும். அது அப்படிச் செய்வது 'என் எசமானே, எனக்கும் அந்த ஆகாரத்தில் கொஞ்சம் கொடு' என்பதுபோல் இருக்கும்.

5. நாய் நமது வீட்டையும் பொருள்களை யும் காவல் செய்வதில் ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனைப்போல் இருக்கிறது. நாயை

விடச் சிறந்த வேலைக்காரன் அகப்படமாட்டான்.

6. சில நாய்கள் கடைக்குப் போய்ச் சாமான் வாங்கிக்கொண்டு வரவும் பழக்கப்பட்டிருக்கின்றன. நமக்கு வேண்டிய சாமான்களை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி ஒரு கூடையில் போட்டால் அது அக்கூடையை வாயில் கௌவிக்கொண்டு கடைக்குப் போகும். கடைக்காரன் காகிதத்தைப் படித்துப் பார்த்துச் சாமான்களைக் கூடையில் போடுவான். அது அவைகளை வீட்டுக்கு ஜாக்கிரதையாய்க் கொண்டுவரும்.

7. நாய் சில சமயங்களில் ஆட்டிடையரோடு போய் ஆடுகளை மேய்ப்பதுண்டு. ஆடுகள் சிதறிப்போகாமல் ஒன்றாய்ச் சேர்த்து அதை மேயவிட்டு சாயங்காலம் அவைகளைப் பத்திரமாய்ப் பட்டியில் கொண்டுவந்து சேர்ப்பதுமுண்டு.

8. சில நாய்கள் மனிதரையும் குழந்தைகளையும் மரணத்திலிருந்து தப்புவித்ததாக அநேக கதைகள் உண்டு. நாம் நாயிடத்தில் மிகவும் அன்பாய் இருக்கவேண்டும்.

'நாயைக் கொடூரமாய் நடத்தாதே.'

6. பேராசையின் பயன்

1. கடவுள் நமக்குக் கொடுத்தது போதா தென்று எண்ணித் திருப்தியடையாமல் மேலும் மேலும் பொருள் வேண்டுமென்று சிலர் இச்சை கொள்வதுண்டு. இதுதான் பேராசை. இப்பேராசைக்கு இடங்கொடுக்கிறவன் புத்தியீனனும் நிர்ப்பாக்கியனுமாயிருக்கிறான். பேராசையின் பயனைப் பின்வரும் கதை விளக்கும்.

2. அதிக பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைகொண்ட ஒரு பேராசைக்காரன் சன்னியாசி வேஷம் போட்டுக்கொண்டு, சீஷன் ஒருவனோடு ஒரு பட்டணத்திற்குப் போனான். அங்குள்ள ஒரு வர்த்தகன் சன்னியாசிக்கும் சீஷனுக்கும் வேண்டிய மரியாதை செய்து தன் வீட்டில் வைத்துக்கொண்டான்.

3. சன்னியாசி தான் உலகத்தை வெறுத்தவன்போல் பாசாங்கு பண்ணினான். பணம் பிசாசு என்று சொல்லி ஐந்து ரூபாயைச் சில்லறையாய் மாற்றித் தன்னிடத்தில் வருபவர்களுக்குத் தானஞ்செய்தான். இதைக் கண்ட ஜனங்கள் 'ஓகோ! இவர் மெய்யாய் உலகத்தை வெறுத்த மகானுபாவர்தான்' என்று புகழ்ந்து கொண்டார்கள்.

4. அப்பால் அந்தச் சன்னியாசி 'நான் வெள்ளியைப் பொன்னாக்குவேன்' என்று சொன்னான். இதைக் கேட்ட வர்த்தகன் ஒரு வெள்ளிப் பணத்தை அவன் கையில் கொடுத்துப் பொன்னாக்கும்படி கேட்டான். உடனே அச் சன்னியாசி அதை எடுத்துக்கொண்டு ஒரு அறைக்குள் போய் ஜெபிப்பதுபோலக் காண்பித்துப் பிறகு தான் முன்னமே மறைத்துவைத்திருந்த பொற்காசைக் கொண்டுவந்து காண்பித்தான். வர்த்தகன் மெய்தான் என்று நம்பிக் கொண்டான்.

5. இதைக் கண்ட ஜனங்கள் தங்கள் வீட்டிலுள்ள வெள்ளி நகைகளையும் வெள்ளிச் சாமான்களையும் கொண்டுவந்து பொன்னாக்கித் தரும்படி கேட்டார்கள். சன்னியாசி ஒரு தவலையைத் தன் முன்னே வைத்து அவற்றை எல்லாம் அத்தவலையிலே போடும்படி சொன்னான்.

6. அவர்கள் சன்னியாசியினுடைய சூதை அறியாமல் தாங்கள் கொண்டுவந்த நகைகளையெல்லாம் தவலையில் போட்டார்கள். சன்னி

யாசி அவர்களுடைய பேரையும் போட்ட நகைகளையும் விபரமாய் ஒரு ஏட்டில் எழுதிக்கொண்டான்.

7. பிறகு சன்னியாசி ஜனங்களை மறுநாள் உதயத்தில் வரும்படி சொல்லிவிட்டு நடுச்சாமத்தில் தவலையையும் அதிலிருந்த சாமான்களையும் தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். உதயத்தில் ஜனங்கள் வந்து பார்த்துச் சன்னியாசி தங்களை வஞ்சித்ததை அறிந்து தங்கள் பேராசைக்காக மனஸ்தாபப்பட்டார்கள்.

'பேராசை தரித்திரம் தீராத உபத்திரவம்.'



7. காக்கை

1. காக்கையானது நாம் தினமும் பார்க்கிற ஓர் பட்சி. அது கறுப்பு நிறமுடையது.

2. அதின் தலை மிகவும் சிறியது. கண்கள் இரண்டும் மிகவும் கூர்மையானவை. அக்கண்களினால் காக்கை எல்லாப் பக்கமும் பார்க்கக் கூடும். அதன் மூக்கு நீண்டு பலத்திருக்கும். அம்மூக்கினால் அது நிலத்தைக் கிளறிப் பூச்சி புழுவை எடுத்துத் தின்னும்.

3. தலையின் இருபுறத்திலும் இரண்டு சிறிய துவாரங்கள் உண்டு. இவைதான் காக்கையின் காதுகள். இவைகளின் வழியாய்த்தான் காக்கை சத்தத்தைக் கேட்டு அறிந்துகொள்ளுகிறது.

4. காக்கையின் கால் ஒவ்வொன்றிலும் நாலு விரல்களுண்டு. அவை கைவிரல்களைப் போலக் காக்கைக்கு உபயோகப்படுகின்றன. அது மரத்தில் உட்கார்ந்திருக்கும்போது விரல்

களினால் கிளையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளும்.

5. காக்கை அதிக துணிவும் ஜாக்கிரதையு முள்ள பட்சி. மிருகங்களுக்குள் நரியும், பட்சிகளுக்குள் காக்கையும் மிகவும் தந்திரமுள்ளவை. சிறு பிள்ளைகள் தின்பண்டம் வைத்திருக்கக் கண்டால் வெடுக்கென்று பிடுங்கிக்கொள்ளும். கோழியாவது நாயாவது சாப்பிடக் கண்டால் உடனே தந்திரமாய் அவைகளைத் துரத்திவிட்டு அவைகளின் ஆகாரத்தைத் தான் தின்றுவிடும். காக்கை மிகவும் கபடமுள்ளது.

6. காக்கை மரங்களில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அது தன் குஞ்சுகளில் மிகவும் பிரீதியுடையது. தனக்கு அகப்படும் ஆகாரத்தில் ஒரு பாகத்தைக் கொண்டு வந்து தன் குஞ்சுகளுக்கு ஊட்டும். யாராவது தன் குஞ்சுக்குத் தீங்கு செய்தால் கா! கா! என்று கத்தித் தன் இனத்தாரைக் கூட்டிக் கூச்சலிடும்.

7. காக்கை பழம், மாமிசம், பூச்சி, புழு முதலியவைகளைத் தின்று ஜீவிக்கின்றது. சாதாரணமாய் அது எந்த வஸ்துவையும் சாப்பிடும். நமது வீடுகளின் புறக்கடையிலுள்ள உச்சிட்டத்தையும் அசுத்தமான வஸ்துக்களையும் அது இஷ்டமாய்ப் புசிக்கும். மனிதருக்குக் கெடுதியை உண்டாக்கும் வஸ்துக்களை அது சாப்பிட்டு விடுகிறதினால் நமக்கு உபயோகமான பட்சியென்றே சொல்லவேண்டும்.

8. காகிதம்

1. பிள்ளை: அப்பா, நான் படிப்பதற்காக நீங்கள் கொடுத்த புஸ்தகம் உங்களுக்கு எப்படி அகப்பட்டது?

2. தகப்பன்: மகனே, அதை நான் கடையில் வாங்கினேன்.

3. பி. கடைக்காரருக்கு அது எப்படி அகப்பட்டது?

4. த. அவன் புஸ்தகம் அச்சிட்டு விற்பவர்களிடத்தில் அதை வாங்கினான்.

5. பி. அப்புஸ்தகம் எதினுல் செய்யப்படு கிறது?

6. த. புஸ்தகம் காகிதத்தினுல் செய்யப் படுகிறது.

7. பி. காகிதம் எப்படி உண்டாகிறது? மாங்காய் மரத்தில் காய்ப்பதுபோல அதுவும் மரத்தில் காய்க்கிறதா?

8. த. மகனே! அப்படியல்ல. காகிதத்தை மனுஷர் செய்வார்கள்.

9. பி. காகிதம் எப்படிச் செய்யப்படுகிறது?

10. த. வைக்கோல், கந்தைகள், நார் முத லியவைகளைக்கொண்டு காகிதம் செய்வார்கள்.

11. பி. என்ன அப்பா! வேடிக்கையாயிருக் கிறது. இவைகள் எப்படிக் காகிதமாகும்?

12. த. என் கண்மணியே! இதில் வேடிக் கை ஒன்றுமில்லை. இவைகளை எல்லாம் முத லில் பொறுக்கி நன்றாய்ச் சுத்தி செய்வார்கள். அப்பால் அவற்றைத் தண்ணீரில் ஊறவைத்து நன்றாய் அரைத்துக் கூழாக்குவார்கள். பின்பு அந்தக் கூழை இயந்திரங்களின் மூலமாய்க் காகிதமாக்குவார்கள்.

13. பி. அப்பா! காகிதம் எங்கிருந்து வரு கிறதென்று இப்பொழுது தெரிந்துகொண்டேன். ஆனல் இந்தப் புஸ்தகத்தில் இரண்டு வர்ண மான காகிதம் இருக்கிறதே, அது எப்படி?

14. த. மெய்தான். மேலே அட்டை போட்டிருக்கும் காகிதம் பச்சை நிறமுடையது. உள்ளே அச்சிடப்பட்டிருக்கும் காகிதம் வெள்ளை நிறமுடையது. அதை எந்த நிறத்திலும் செய்துகொள்ளலாம்.

15. பி. காகிதத்தின் வேறு உபயோகங்கள் எவை?

16. த. காகிதம் கடிதம் எழுதவும், படங்கள் வரையவும், பெட்டி முதலியவை செய்யவும் உபயோகப்படும். வீடுகளையும் சுவர்களையும் சிங்காரிப்பதற்கும் அதை உபயோகிக்கிறார்கள். இன்னும் காகிதத்தைப்பற்றிய விபரமும் அதில் அச்சிடும் விதத்தையும் நீ சற்றுப் பெரியவனான பின் தெரிவிப்பேன். இப்பொழுது சொன்னால் நீ தெரிந்துகொள்ளமாட்டாய்.

9. உலகநாதன் செய்த நீதி வாக்கியங்கள்

ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
மாதாவை யொருநாளு மறக்கவேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்.
போகாத விடந்தனிலே போகவேண்டாம். (5)

போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்.
நஞ்சுடனே யொருநாளும் பழகவேண்டாம்.
நல்லிணக்க மில்லாரோ டிணங்கவேண்டாம். (10)

அஞ்சாமற் றனிவழியே போகவேண்டாம்.
அடுத்தவரை யொருநாளுங் கெடுக்கவேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
மாற்றானை யுறவென்று நம்பவேண்டாம்.
தனந்தேடி யுண்ணாமற் புதைக்கவேண்டாம்.

தருமத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்.
சினந்தேடி யல்லலையுந் தேடவேண்டாம்.
சினந்திருந்தார் வாசல்வழிச் சேரவேண்டாம்.
குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்.
கொலைகளவுசெய்வாரோ டிணங்கவேண்டாம்

கற்றவரை யொருநாளும் பழிக்கவேண்டாம்.
கொற்றவனோ டெதிர்மாறு பேசவேண்டாம்.
கோயிலில்லா வூரிற்குடியிருக்கவேண்டாம்.
வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்[டாம்.

10. விறகு சுள்ளிக்கட்டு

1. பெரிய குடும்பம் ஒன்றுக்குத் தலைவனாயிருந்த ஒரு வர்த்தகன் தன் பிள்ளைகள் எப்பொழுதும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவதைக் கண்டு மிகவும் விசனப்பட்டான். அவர்கள் சண்டையிடாமல் எப்பொழுதும் சமாதானமாய் ஒருமித்து வாழவேண்டுமென்று அவன் பலமுறையும் புத்தி சொல்லிவந்தான். அவர்களோ அதைக் கவனிக்கவில்லை.

2. சிலநாட் பொறுத்து அவ்வர்த்தகன் வியாதிப்பட்டுப் படுக்கையாய்ப் படுத்திருந்தான்.

படுத்துக்கொண்டு பிள்ளைகளைப்பற்றி யோசிக்கும்போது ஒரு உபாயம் தட்டுப்பட்டது.

3. உடனே அவன் தன் பிள்ளைகளைக் கூப்பிட்டுக் காட்டுக்குப் போய் விறகு சுள்ளிகள் வெட்டிக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அப்படியே அவர்கள் போய்ச் சிறு சுள்ளிகளை வேண்டியமட்டும் வெட்டிக்கொண்டு வந்தார்கள்.

4. அவன் அச்சுள்ளிகளை ஒரு கட்டாய்க் கட்டச் சொல்லி அவர்கள் முன்னே வைத்து 'என் அன்புள்ள மக்களே! இக்கட்டை அப்படியே முறித்துவிடுங்கள் பார்ப்போம்' என்றான். அவர்கள் ஒவ்வொருவரும் அதை முறித்துவிடப் பிரயாசப்பட்டார்கள். அவர்களால் சாத்தியப்படவில்லை.

5. பிறகு வர்த்தகன் விறகு கட்டைப் பிரித்து, சுள்ளிகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் பிள்ளைகள் கையில் கொடுத்து ஒடிக்கச் சொன்னான். அவர்கள் ஒவ்வொருவரும் வெகு சுலபமாய் ஒடித்துவிட்டார்கள்.

6. பிறகு வர்த்தகன் மக்களைப் பார்த்து, விறகு சுள்ளிகள் கட்டாயிருந்தபோது ஒடிப்பது உங்களுக்கு வெகு கஷ்டமாயிருந்தது. ஆனால் ஒன்றொன்றாய்ப் பிரித்தபின் ஒடிப்பது சுலபமாயிற்று. கட்டாயிருந்தபோது எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்திருந்தபடியால் பலமாயிருந்தன. அவை பிரிக்கப்பட்டபின் பலம் குறைந்து போகவே லேசாய் ஒடித்துவிட்டீர்கள்.

7. அதுபோலவே சகோதரராகிய நீங்களும் ஒன்று சேர்ந்து இருப்பீர்களானால் பலமுடையவர்களாயிருப்பீர்கள். ஒருவரும் உங்களுக்குக் கெடுதி செய்யமாட்டார்கள். நீங்கள் சண்டையிட்டு ஒருவரோடு ஒருவர் விரோதப்பட்டால் பலமற்றவர்கள் ஆவீர்கள். அப்பொழுது பிறர் உங்களுக்குக் கெடுதி செய்வது சுலபம் என்றான்.

8. பிள்ளைகள் அதைக் கேட்டு அன்று முதல் மிகவும் ஐக்கியமாய் வாழ்ந்தார்கள்.

11. விக்டோரியா ராணி

1. பிள்ளைகளே! இது யாருடைய படம்? இந்த அம்மாளை நீங்கள் எப்போதாவது பார்த்த துண்டா? படத்தை நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். இந்த அம்மாளுடைய தலையிலே முடியும், கழுத்திலே இரத்தினமாலையும் இருக்கின்றன. இன்னும் வேறு நகைகளும் அணிந்திருக்

கிறார்கள். கையில் விசிறி வைத்திருக்கிறார்கள்; ஆகையால் இவர்கள் சாதாரணமான பெண் பிள்ளையல்ல. அப்படியானால் இவர்கள் யார்?

2. இந்த அம்மாள்தான் நமது பழைய மகா ராணி. இவர்கள் லண்டன் பட்டணத்தில் பிறந்தார்கள். இந்த அம்மாளுடைய தாயாரே பிள்ளைப் பருவத்தில் இவர்களை விசாரித்து வந்தார்கள்.

3. இளமையில் இவர்கள் வெகு சுறுசுறுப்பும் விளையாட்டில் பிரியமுமுள்ளவர்கள். குதிரையேறிச் சவாரி செய்வது இந்த அம்மாளுக்கு மிகவும் இஷ்டம். இவ்விதமாய்த் தேகப்பயிற்சி செய்து வந்தமையால் அவர்கள் சுகமும் பலமும் உள்ளவர்களானார்கள். சுகதேகமுடையவர்களாய் இருந்தபடியால்தான் நெடுங்காலம் ராணியாய் இருந்தார்கள்.

4. இந்த அம்மாளுக்குப் பாடம் சொல்ல நல்ல உபாத்திமாரை ஏற்படுத்தினார்கள். அவர்களிடத்தில் நமது ராணி நன்றாய்க் கற்றுத்தேறினார்கள். பாட்டுப்பாடுவதிலும், கின்னரப்பெட்டி வாசிப்பதிலும், சித்திரம் எழுதுவதிலும் அவர்களுக்கு மிக்க திறமை வந்தது. தையல்வேலையை அவர்கள் அசட்டை செய்யவில்லை.

5. ராஜாவாயிருந்த அவர்களுடைய பெரிய தகப்பன் இறக்க அவர்கள் ராணியானார்கள். பிறகு இந்த ராணி ஆல்பேர்ட் பிரபுவை விவாகம் செய்துகொண்டார்கள். இந்த அம்மாள் ஒன்பது பிள்ளைகளைப் பெற்றபின் அவர் இறந்தார்.

6. இந்த அம்மாளின் மூத்த குமாரர்தான் ஏழாம் எட்வர்ட் ராஜா. அவர் ஒன்பது வருஷம் ராஜாவாக விருந்து இறந்துபோனார். அவருக்குப் பின் இப்பொழுது நமது ராஜாவாயிருக்கும் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி பட்டத்திற்கு வந்தார். ஆகையால் ஜார்ஜ் அரசர் நமது ராணிக்குப் பேரன்.

7. நமது ராணி மிகவும் அன்புடையவர்கள். ஏழைகள்மீது இரக்கமும் கஷ்டப்படுகிறவர்களிடத்தில் பரிதாபமும் உடையவர்கள். அவர்கள் வியாதியாயிருப்பவர்கள் வீட்டுக்குப் போய் மருந்து கொடுப்பதுண்டு. குடியானவர்களுடைய குடிசைகளுக்குப் போய் அவர்களை விசாரிப்பதுண்டு. தேவபக்தி அவர்களிடத்தில் விசேஷமாயுண்டு; ஆகையால்தான் அவர்களுடைய குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது. இந்த ராணியை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

12. சேவகன் வீணையை ஒடித்தது

1. ஒருநாள் ஒரு ராஜா சாப்பிட்டு ஆன பின்பு வேடிக்கையாய்ப் பொழுதுபோக்க எண்ணினான். உடனே அவன் தன் வீணையைக் கையிலெடுத்துக்கொண்டு மாடியின்மேலுள்ள தன் அழகிய மண்டபத்தில் வந்து உட்கார்ந்தான்.

2. மண்டப வாயிலில் ராஜாவுடைய சேவகன் காவல் செய்துகொண்டு நின்றான். ராஜா



வீணையை மடிமேல் வைத்து முறுக்காணிகளைப் பிடித்து முறுக்கிச் சுதி கூட்டிக்கொண்டிருந்தான்.

3. ராஜா முறுக்காணிகளை ஒவ்வொன்ருய் முறுக்குவதையும் தலையை அசைப்பதையும் சேவகன் கவனித்தான். 'ஓகோ! இது என்ன புதுமை! இந்த அற்ப வீணையை ஒடிப்பதற்கு நமது ராஜா என் இவ்வளவு கஷ்டப்படவேண்டும்; நான் ஒரு நிமிஷத்தில் ஒடித்துவிடுவேனே' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ராஜா வீணையை ஒடித்துவிடுவதற்குப் பிரயாசப்படுவதாகச் சேவகன் மூடத்தனமாய் எண்ணிக்கொண்டான்.

4. இச்சமயத்தில் ராணி தாதியை அனுப்பி ராஜாவை அழைத்தாள். ராஜா வீணையைப் பக்கத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டான்.

5. சேவகனுக்கு இப்பொழுது நல்ல சமயம் கிடைத்தது. அவன் அதின் கிட்டப் போய் மெதுவாய் வீணையை எடுத்துத் துண்டு துண்டாய் உடைத்தான். பிறகு உடைத்த துண்டுகளை அங்கேயே வைத்துவிட்டுத் தன்னுடைய இடத்தில் போய் நின்றான்.

6. ராஜா திரும்பி வந்து வீணை உடைந்திருப்பதையும் சேவகன் சந்தோஷமான முகத்துடன் இருப்பதையும் கண்டான். ராஜா அவனை

நோக்கி 'அடே சேவகா! இந்த வீணையை எப்படி உடைத்தாய்?' என்றான்.

7. சேவகன் சந்தோஷத்தோடு 'ஸ்வாமீ தாங்கள் அதை உடைக்க அதிக கஷ்டப்பட்டீர்கள். நான் அதை அதிக சிரமமில்லாமலே உடைத்துவிட்டேன்' என்றான்.

8. ராஜா அவன் மூடத்தனத்துக்காக விசனப்பட்டு அவனை மன்னித்துவிட்டான்.

13. பிராமண ஸ்திரீயும் கீரிப்பிள்ளையும்

1. தென்தேசத்தில் ஒரு பட்டணத்தில் ஒரு பிராமணனும் அவன் மனைவியும் வெகு அன்பு

டன் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு விவாகமாகி நெடுங்காலம் ஆகியும் குழந்தை யில்லாமையால் மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

2. அக்குழந்தையை அவர்கள் மிக்க அருமையாய் வளர்த்து வந்தார்கள். அவர்கள் அதிக நேசம் பாராட்டி வளர்த்த ஒரு கீரிப் பிள்ளையும் வீட்டில் இருந்தது.

3. ஒருநாள் அப்பிராமணன் ஏதோ வேலையாய் வெளி ஊருக்குப் போய்விட்டான். அவன் மனைவி வீட்டில் இருந்தாள். அவள் சாயங்காலம் பிள்ளையைத் தொட்டிலிலே தூங்கவைத்து விட்டுக் குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் மொள்ளப் போனாள்.

4. அச்சமயத்தில் கருநாகம் ஒன்று வீட்டுக்குள் வந்து குழந்தை படுத்திருந்த தொட்டிலண்டை போயிற்று. அதைப் பார்த்துக்கொண்டிருந்த கீரிப்பிள்ளை மெதுவாய்ப் போய் அந்தக் கருநாகத்தைக் கடித்துக் கொன்றுவிட்டது. நாகத்தைக் கொன்றுவிட்டதால் குழந்தை அபாயத்திலிருந்து தப்பிற்று.

5. அப்பால் பிராமண ஸ்திரீ குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு வருவதைக் கீரிப் பிள்ளை கண்டது. உடனே அது இரத்தம் நிறைந்த முகத்தோடு அவளண்டை விரைந்து ஓடிற்று. நாகத்தைக் கொன்றுவிட்டதற்காக அவள் சந்தோஷப்படுவாள் என்று அது நினைத்தது.

6. வாயில் இரத்தத்தோடு கீரிப்பிள்ளை ஓடி வருவதை அவள் கண்டாள். ஓகோ! இக்கீரிப் பிள்ளை வாயில் இரத்தம் இருக்கவேண்டிய காரணம் என்ன? இது நம்முடைய குழந்தையைக் கடித்துக் கொன்று இருக்கவேண்டுமென்று அவள் யோசித்துத் தண்ணீர்க்குடத்தை அதின் தலைமேல் எறிந்தாள். உடனே கீரிப்பிள்ளை கீழே விழுந்து இறந்தது.

7. பிறகு அவள் வீட்டுக்குள் போய்ப் பார்த்தாள். குழந்தை தொட்டிலில் சுகமாய்த் தூங்கிக்கொண்டிருப்பதையும், நாகம் இறந்து கிடப்பதையும் கண்டாள். 'ஐயோ! நான் அநியாயமாய் என் அருமையான கீரிப்பிள்ளையைக் கொன்றேனே' என்று சொல்லி அழுதாள்.

'ஆத்திரக்காரருக்குப் புத்தி மட்டு.'

14. நிலாப் பாட்டு

1. வித்ததின்றி யேயெழுந்த
வெண்ணிலாவே—நீ
விளங்கும்வகை யேதுரைப்பாய்
வெண்ணிலாவே.

2. அகிலமெங்கு மோடுகின்ற
வெண்ணிலாவே—நீ
ஆடுகின்ற சீலமென்ன
வெண்ணிலாவே.

3. ஞானவொளி வீசுகின்ற
வெண்ணிலாவே—உன்னை
நானறியச் சொல்லுகண்டாய்
வெண்ணிலாவே.

4. களங்கமுன்றன் மேனிதனில்
வெண்ணிலாவே—யான்
காண்பதற்கு நியாயமென்ன
வெண்ணிலாவே.

5. பூரணமாய்த் தோன்றுகின்ற
வெண்ணிலாவே—உன்
பொன்னார்மேனி குறைவதென்ன
வெண்ணிலாவே.

6. பாதிமாதம் தோன்றுவதேன்
வெண்ணிலாவே—மற்றப்
பாதிதனில் மறைவதென்ன
வெண்ணிலாவே.

7. சூரியனை வெறுப்பதென்ன
வெண்ணிலாவே—உன்றன்
சோதிமுகம் காண்பதென்ன
வெண்ணிலாவே.

15. ராஜனும் கைதிகளும்

1. ஒருநாள் ஒரு ராஜன் தன் அரமனை உத்தியோகஸ்தர் சிலரோடு தன் நகரத்தைச் சுற்றி வேடிக்கையாய் உலாவிக்கொண்டு வந்தான். குடிகள் தன்னை நேரில் சந்தித்துத் தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக்கொள்ளும்படியாக ராஜன் இப்படி நகரத்தைச் சுற்றிவருவது வழக்கம்.

2. ராஜன் வீதி வழியாய்ச் செல்லும்போது கால்களிலும் கைகளிலும் விலங்கு மாட்டப்பெற்ற மூன்று கைதிகளைக் காவலாளி ஒருவன்

நடத்திக்கொண்டு வருவதைக் கண்டான். ராஜன் அவர்களைக் கண்டவுடன் தன் பக்கத்தில் நின்ற மந்திரியைப் பார்த்து 'இவர்கள் யார்? இவர்களை ஏன் இவ்விதமாய் அக்காவலாளி நடத்திக்கொண்டு வருகிறான்?' என்று கேட்டான். மந்திரி 'ராஜனே! இவர்கள் கைதிகள்; ஏதோ குற்றஞ் செய்ததினால் இத்தண்டனைக் குள்ளானார்கள்' என்றான்.

3. இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது கைதிகளும் ராஜன் எதிரே வந்தார்கள். ராஜன் அவர்கள் எவ்விதமாய் மறியற்சாலைக்கு வந்தார்களென்று ஒவ்வொருவராய் விசாரித்து அறிய விரும்பினான்.

4. ராஜன் முதலாவது கைதியை நோக்கி, 'நீ எவ்வித குற்றம்செய்து இவ்வித தண்டனை அடைந்தாய்?'' என்றான். அதற்கு அக்கைதி 'ராஜாதி ராஜனே! நான் ஒன்றும் செய்யவில்லை. அண்டை வீட்டுக்காரன் எனக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னபடியால் எனக்கு இச் சங்கடம் நேரிட்டது' என்றான்.

5. பிறகு ராஜன் இரண்டாவது கைதியை நோக்கி, 'நீ ஏன் கைதியானாய்?' என்றான். அக் கைதி 'ஐயனே, நான் தகாத காரியம் ஒன்றும் செய்யவில்லை. வீதி வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு திருடன் நகையைத் திருடிக்கொண்டு என் பக்கமாய் ஓடிவந்தான். அத்திருடன் நானே யென்று அநியாயமாய் என்மேல் குற்றம் சாட்டிக் கைதியாக்கினார்கள்.

மெய்யாய்த் திருடினவனைத் தப்ப விட்டுவிட்டார்கள்' என்றான்.

6. அப்பால் ராஜன் மூன்றாம் கைதியை நோக்கி, 'நீ என்ன தப்பிதம் செய்து சிறைச்சாலையை அடைந்தாய்?' என்றான். உடனே அக்கைதி 'துரையே! நான் பொய் சொல்லமாட்டேன். ஒரு குழந்தையைத் தந்திரமாய்க் காட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அக்குழந்தை அணிந்திருந்த நகைகளைத் திருடினேன்; அதற்காக எனக்கு இரண்டு வருஷம் கடினகாவல் விதித்தார்கள். இதுவே நான் சிறைச்சாலையை அடைந்ததற்குக் காரணம்' என்றான்.

7. ராஜன் அவனுடைய தைரியத்தை மெச்சி மந்திரியைப் பார்த்து, 'இவன் யோக்கியன்; இவன் இத்துஷ்டர் கூட்டத்தில் இருக்கத் தகுந்தவனல்ல' என்றான். பிறகு காவலாளியைப் பார்த்து: 'அடே! இவன் சங்கிலிகளை வெட்டி இவனை உடனே விடுதலையாக்கு; இவன் உண்மையைச் சொன்னான்; ஆதலால் இவன் இக்கள்வர் கூட்டத்தில் இருத்தல் தகாது' என்றான். காவலாளி உடனே சங்கிலிகளை வெட்டி அக்கைதியை விடுதலையாக்கினான். கைதி தன்னை விடுதலையாக்கினதற்காக ராஜனுக்கு நன்றி சொல்லி வீட்டுக்குச் சென்றான்.

'சத்தியமே ஜயம் தரும்.'

16. குரங்கும் பூனைகளும்

1. பசியினால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த இரண்டு பூனைகள் எவ்விதமாகவோ ஒரு பாலடைக்கட்டியைத் திருடிக்கொண்டன. ஆனால் அதைப் பங்கிட்டுக்கொள்ளும் விஷயத்தில் இரண்டிற்குமிடையில் சண்டை யுண்டாயிற்று.

2. ஒரு பூனை 'இதென்ன! நீ அதிகம் எடுத்துக்கொண்டாயே, என் பங்கு கொஞ்சமாயிருக்கிறதே' என்றது. இல்லை 'என் பங்குதான் கொஞ்சமாயிருக்கிறது; நீ அதிகமெடுத்துக் கொண்டாய்' என்றது மற்றொன்று. இவ்விதமாய் இரண்டும் வாக்குவாதம்பண்ணிக் கடைசியில் தங்கள் வழக்கைத் தீர்க்க ஒரு குரங்கை மத்தியஸ்தராக ஏற்படுத்திக்கொண்டன.

3. அப்படியே குரங்கு நியாயம் விசாரிப்ப தற்காக உயரமான ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டது. பூனைகளிரண்டும் இரண்டு பக்கத் திலு மிருந்துகொண்டு தங்கள் தங்கள் வழக் கைச் சொல்லிக்கொண்டன. அப்பொழுது பூனைகளிலொன்று, 'ஐயா! வானரமே! நாங்கள் இப்பாலடைக்கட்டியை ஒரு வீட்டிலிருந்து திரு டினோம். அதை நீர் தயவுசெய்து சமபாக மாய்ப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டது.

4. குரங்கு தனக்குள் அதிக சந்தோஷ மடைந்து, 'பூனைகளே! நீங்கள் இருவரும் தேடிய பொருளைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்வதே சரி. உங்கள் பாலடைக்கட்டியைக் கொண்டு வாருங்கள்; நான் பங்கிட்டுத் தருகிறேன்' என் றது. பூனைகள் பாலடைக்கட்டியைக் குரங்கி னிடம் கொடுத்தன.

5. உடனே குரங்கு அதை இரண்டு பங்கா கப் பிரித்து ஒரு தராசின் இரண்டு தட்டிலும் வைத்துத் தூக்கிப் பார்த்தது. ஒஹோ! இது அதைவிட அதிகமாயிருக்கிறது என்று ஒரு பாகத்தை வாய் கொண்டமட்டும் கடித்துத் தின்றுவிட்டது. பிறகு மற்றத் தட்டிலிருப்பது அதிகமென்று சொல்லி அதிலும் கடித்துத் தின்றது. இப்படியே மாறி மாறி அது தின்ற திஞல் பாலடைக்கட்டி வரவரக் குறைந்துபோ யிற்று.

6. இதைக்கண்ட பூனைகள்: 'ஐயா! குரங் கே! பொறும்! பொறும், இனிப் போதும்; மீந்

திருப்பதை எங்களுக்குக் கொடுத்துவிடும்' என்றன. குரங்கோ 'கொஞ்சம் பொறுங்கள்; நீங்கள் என்னைத் தேடி வந்தபடியால் உங்கள் வழக்கை நியாயமாய்த் தீர்க்கவேண்டியது என் கடமை. ஆகையால் ஒருவருக்கு அதிகமாகவும் மற்றவருக்குக் குறைவாகவும் கொடுக்கும் அக்கிரமத்திற்கு நான் உடன்படேன்' என்று சொல்லி இரண்டு பங்கையும் சாப்பிட்டுக்கொண்டே இருந்தது.

7. பாலடைக்கட்டி கொஞ்சம் கொஞ்சமாக முற்றிலும் குறைந்துபோனதைப் பூனைகள் கண்டு, 'ஐயா, இனியாகிலும் கொடுத்துவிடும்' என்று வேண்டிக்கொண்டன. குரங்கு, 'ஐயோ! இத்தனை படபடப்பு ஆகுமா? நான் உங்களுக்காக இவ்வளவு பாடுபட்டு விட்டுச் சும்மா போவேணு' என்று சொல்லி மீதியாயிருந்த கட்டியையும் வாயில் போட்டுக்கொண்டு ஓடிப்போயிற்று. பூனைகள் இரண்டும் விசனப்பட்டுக்கொண்டு தம் வழியே போயின.

நமக்குக் கிடைத்த அளவில் நாம் திருப்தியடையவேண்டும். இல்லாவிட்டால் உள்ளதையும் இழந்து வருந்துவோம்.



17. டில்லி நகரம்

1. இந்த அழகான நகரம் வட இந்தியாவில் யமுனை நதிக்கரையில் கட்டப்பட்டிருக்கிறது. அது மிகவும் பழைய நகரம். நெடுங்காலம் அது இந்தியாவின் தலை நகரமாக விளங்கிற்று.

2. பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தர்மர் அதை முதலில் ஏற்படுத்தினதாகச் சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அக்காலத்தில் அதற்கு இந்திரப்பிரஸ்தம் என்ற வேறு பெயர் இருந்தது. முற்காலத்தில் நம்மை ஆண்ட இந்து ராஜாக்களும் மகமதிய ராஜாக்களும் டில்லியையே ராஜதானியாக வைத்திருந்தார்

கள். அவர்கள் கட்டிய அநேக அழகிய கட்டடங்கள் அங்கே உண்டு.

3. மேலே காட்டியிருக்கும் படம் அங்கேயுள்ள ஓர் மண்டபத்தைக் குறிப்பிக்கிறது. அது எவ்வளவு விநோதமாயிருக்கிறது பாருங்கள். தூண்களில் எவ்வளவு அற்புதமான வேலை செய்யப்பட்டிருக்கிறது.

4. நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் ராஜா டில்லியைப் பழையபடி இந்தியாவின் தலைநகராக்க எண்ணினார். ஆகையால் அவருடைய பட்டாபிஷேகம் அங்கே நடந்தது. நமது அங்கிலேய அரசர் முன் ஒருபோதும் இந்தியாவிற்கு வந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டதில்லை. இதுதான் முதல்முறை.

5. பற்பல தேசத்து ராஜாக்களெல்லாரும் அங்கே போய்க் கூடினார்கள். ஜனங்கள் நாலு பக்கங்களிலிருந்தும் வந்து நிறைந்தார்கள். அங்கே பட்டாபிஷேகத்திற்கென்று அமைக்கப்பட்ட அழகிய மண்டபத்தில் நமது ராஜா எழுந்து நின்று டில்லியே இனிமேல் இந்தியாவின் தலைநகரமென்று தெரிவித்தார்.

6. நமது ராஜா சொன்ன வார்த்தைகளைக் கேட்டு ஜனங்கள் ஆனந்தங்கொண்டார்கள். அவர் அச்சமயத்தில் காட்டிய தயவுகளுக்காக அவருக்கு நன்றி கூறினார்கள்.

7. ஆகையால் டில்லி இப்பொழுது இந்தியா முழுவதற்கும் தலைநகராயிருக்கிறது. நமது ராஜப்பிரதிநிதி அங்கே வாசம் செய்துகொண்டு அங்கிருந்தபடியே ராஜ்ஜியத்தை நடத்தி வருகிறார்.

18. ஔவையார் அருளிச்செய்த வெற்றிவேற்கை

1. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.

2. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

3. சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்,
பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்,
பெற்றோ ரெல்லாம் பிள்ளைகள் அல்லர்,
உற்றோ ரெல்லாம் உறவினர் அல்லர்.

4. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது,
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது,
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது,
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது,
கலக்கினும் தண்கடல் சேறா காது.

5. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே,
சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே,
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயில்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.



19. கொக்கும் மீன்களும்

1. மீன்களையே அதிகமாகத் தின்று வளர்ந்த ஒரு கிழக்கொக்கு ஒரு குளக்கரையில் உட்கார்ந்து அக்குளத்தில் துள்ளி விளையாடும் மீன்களைப் பார்த்துக்கொண்டிருந்தது. அப்பொழுது மீன்கள் கொக்கைப் பார்த்து, 'நாங்கள் உனக்கு ஆகாரமாயிற்றே; அப்படியிருக்க எங்களை நீ சாப்பிடாமல் சும்மா இருப்பதேன்' என்றன.

2. கொக்கு: 'நான் மீன்களைத் தின்பது மெய்தான். ஆயினும் நாளைக்கு இங்கே செம்படவன் வருவான். அவன் வலையெறிந்து உங்களைப் பிடித்துத் தின்றுவிட்டால் எனக்கு ஆகாரம் இல்லாமல் போய்விடுமேயென்று விசனப்படுகிறேன்' என்றது.

3. உடனே மீன்களெல்லாம் கூட்டம் கூடி, 'ஐயோ! நம்மை நாளைக்குச் செம்படவன் பிடிக்கப்போகிறானே; நாம் அவன் கைக்குத் தப்பிப் பிழைப்பதெப்படி? இதற்கு என்ன உபாயம் செய்யலாம்? நமக்கு இதைப்பற்றி அறிவித்த கொக்கையே தப்புவதற்கு உபாயம் கேட்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டன. பிறகு கொக்கைப் பார்த்து 'ஐயா! நீயே எங்களை இப்போது இரட்சிக்கவேண்டும்' என்றன.

4. கொக்கு 'செம்படவனோடு சண்டைபோடுவதற்கு எனக்குச் சக்தியில்லை; ஆனால் நான் உங்களை வேறோரிடத்திற்குக் கொண்டுபோய் இச்சங்கடத்திலிருந்து தப்புவிப்பேன்' என்றது. மீன்கள் அப்படியே கொண்டுபோகும்படி வேண்டின.

5. கொக்கு நடைக்கு ஒவ்வொன்றாகக் குளத்திலிருந்த மீன்களையெல்லாம் மூக்கினால் கௌவிக் கொண்டுபோய்ச் சில மீன்களைத் தின்றது. மற்றவைகளை ஒரு பெரிய கல்லின்மேல் உலர வைத்தது. இப்படியே அது மீன்களையெல்லாம் கொண்டுபோன பின் கடைசியாய் ஒரு நண்டைக் கௌவிக்கொண்டு போயிற்று. அந்த நண்டு, வழியில் மீன்கள் செத்துக்கிடப்பதையும், மீன் முட்கள் சிந்திக்கிடப்பதையும் கண்டது. 'ஓஹோ! இந்த வஞ்சனையான கொக்கு நமது சிநேகிதரையெல்லாம் கொன்றுவிட்டது; நம்மையும் அப்படியே கொல்லப்போகிறது; இதற்குமுன் நாம் இதைக் கொல்லவேண்டும்; இல்லாவிட்டால்

நாம் தப்புவதற்கு ஏதுவில்லை' என்று இப்படித் தனக்குள் ஆலோசித்தது.

6. பிறகு கொக்கைப் பார்த்து 'சிநேகிதா, அந்தக் குளத்தில் இன்னும் சில மீன்கள் இருக்கின்றன; என்னை நீ திரும்பியும் அங்கே கொண்டு போவாயானால் அவைகளையும் உனக்குக் காண்பிப்பேன்' என்றது. கொக்கு மிகவும் சந்தோஷத்துடன் திரும்பிப்போயிற்று.

7. குளத்துக்குச் சமீபமாய்ப் போனவுடன் நண்டு தன் கொடுக்கால் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாய் நறுக்கிவிட்டுக் குளத்தில் விழுந்து சுகமாய் வாழ்ந்தது.

'அதிக ஆசை அதிக நஷ்டம்.'

20. ஆமையும் அன்னப்பட்சிகளும்

1. ஒரு குளத்தில் இரண்டு அன்னப்பட்சிகள் ஒரு ஆமையுடன் மிக்க சிநேகமாய் வாழ்ந்துகொண்டிருந்தன. அன்னங்கள் பட்சி ஜாதியைச் சேர்ந்தவை. ஆமையோ நீரில் வாழும் பிராணி. அப்படியிருந்தும் அவைகள் மிகவும் ஐக்கியமாய் அக்குளத்தில் வாசம் செய்து கொண்டு வந்தன.

2. இப்படியிருக்க மழை இல்லாமையால் குளத்திலிருந்த தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாய் வற்றிப்போயிற்று. அதினால் அன்னங்கள் வருத்தப்பட்டு வேறு குளத்துக்குப் போக



உத்தேசித்து அதைத் தங்கள் சிநேகிதனாகிய ஆமைக்குத் தெரிவித்தன. ஆமை அதைக் கேட்டு, 'நீங்கள் என்னைத் தனியாய் விட்டுப் போவது சரியல்ல, என்னையும் அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு போங்கள்' என்றது. அன்னங்கள் அப்படிச் செய்வதாக ஒப்புக் கொண்டன.

3. ஆமையோ, 'உங்களுக்கு இறக்கைகள் இருப்பதினால் நீங்கள் பறந்துபோவீர்கள்; நான் எப்படி அங்கே வருவேன்' என்றது. அன்னங்கள் 'நீ நாங்கள் சொல்லுகிறபடி கேட்டு நடப்பாயானால் உன்னையும் அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு போவோம். நீ வழியிலே ஏதாவது பேசினால் சாவாய்' என்றன. ஆமை அதற்கு உடன்பட்டது.

4. அன்னங்கள் ஒரு கழியைக் கொண்டு வந்து ஆமையைப் பலமாய்க் கடித்துப் பிடித்துக்கொள்ளச் சொல்லித் தாங்கள் இருபுறமும் வாயினல் அக்கழியைக் கௌவிக்கொண்டன. பிறகு அவைகள் ஆகாயமார்க்கமாய் ஒரு பட்டணத்தின் மேலாகப் பறந்துபோயின.

5. இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த அப்பட்டணத்து ஜனங்கள் 'ஒஹோ! இது என்ன ஆச்சரியம்! இரண்டு பறவைகள் ஒரு கழியை ஒரு ஆமையால் பிடிப்பித்துக் கொண்டு பறந்து போகின்றனவே' என்று சொல்லிக் கைகொட்டிச் சிரித்து இரைச்சலிட்டார்கள். இந்த இரைச்சலைக் கேட்ட ஆமை சிறிதுதூரம் வாயைத் திறவாமலே போயிற்று.

6. ஜனங்கள் பின்னும் சத்தமிடவே ஆமைக்கு அதிக ஆச்சரியமுண்டாயிற்று. ஆகவே அது வாயைத் திறந்து 'இவ்விரைச்சல் எங்கிருந்து உண்டாகிறது' என்று கேட்டது. உடனே அது கீழே விழுந்து நசுங்கி இறந்தது. அங்கேயிருந்த புலால் உண்பவர்கள் அதை எடுத்துச் சமைத்துச் சாப்பிட்டார்கள். பறவைகள் மிக்க விசனத்தோடு பறந்துபோயின.

'நமக்குச் சகாயம் செய்பவர்கள் பேச்சை நாம் தள்ளலாகாது.'

21. மூடவனும் சிறுவரும்

1. ஏறக்குறையப் பதினாறு வயதுள்ள ஒரு மூடவன் ஒருநாள் வீதி வழியாய்ப் போய்க் கொண்டிருந்தான். அவன் கால்கள் ஊனமா யிருந்தமையால் உட்கார்ந்தபடி நகர்ந்துபோ வதே தவிர எழுந்து நிற்கவாவது நடக்கவா வது அவனுக்குச் சக்தியில்லை.

2. இவன் இப்படி நகர்ந்து செல்வது, வீதி யில் விளையாடிக்கொண்டிருந்த சில சிறுவருக்கு வேடிக்கையாயிருந்தது. அவர்கள் அவன்

பின்னுகை ஓடிப்போய் 'முடவா! முடவா! எங்கே போகிருய்' என்று கூவினர்கள். முடவனுக்கு அதிக கோபமுண்டாயிற்று. அவன் அவர்களை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி அடிக்க எத்தனித்தான். சிறுவர்கள் அவனுக்குக் கிட்டப் போகப் பயந்தார்கள்.

3. இப்படி அம்முடவன் போகப் போகச் சிறுவரும் அவன் பின்னுகவே சென்று கடைசியாய் ஒரு தோட்டத்தண்டை வந்தார்கள். அங்கே ஒரு மரத்தின் கிளையில் தேனீ கூண்டு கட்டித் தேன் எதேஷ்டமாய்ச் சேர்த்து வைத்திருந்தது. முடவன் தேன் கூண்டைப் பார்த்ததும் அதிலிருக்கும் தேனைப் புசிக்க ஆசை கொண்டான்.

4. அவன் தேன் கூண்டிற்குச் சமீபமாய்ப் போய் அதைத் தொடலாமென்று கையை நீட்டினன். அது அவன் கைக்கு எட்டவில்லை. முடவன் கூடியமட்டும் எட்டி எட்டிப் பார்த்தான்; கொட்டாவி விட்டான். 'ஐயோ! கண்ணுல் இக்கூண்டைக் கண்டும் தேனைச் சாப்பிடக் கிடைக்கவில்லையே' என்று அழுதான். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால் கிட்டுமா?

5. இச்சமயத்தில் சிறுவர்கள் தூர நின்று இவ்வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். 'இந்த முடவன் நம்மை வைதான். இவனுக்குப் புத்தி படிப்பிக்கவேண்டும்' என்று சொல்லி அக்கூண்டில் கல்லை எறிந்தார்கள்.

6. உடனே அதிலிருந்த தேனீக்களெல்லாம் வெளிப்பட்டு நாலு பக்கத்திலும் பறந்து போயின. சிறுவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். முடவனால் ஓடச் சக்தியில்லை. அவன் கூண்டண்டையில் உட்கார்ந்திருந்தான். தேனீக்கள், கல்லால் அடித்தது அவன் தானென்று எண்ணி அவனை நன்றாய்க் கடித்தன. சிறுவர்கள் தூரத்திலே நின்று சிரித்தார்கள். முடவன் 'நமக்கு அகப்படாத வஸ்துவுக்கு ஆசைப்பட்டதினால் அல்லவா இக்கெடுதி நேரிட்டது' என்று சொல்லி விசனப்பட்டுக்கொண்டு போய்விட்டான்.

'உனக்கு அகப்படாத வஸ்துவுக்கு
ஆசைகொள்ளாதே.'

22. மனுஷனும் வாத்தும்

1. மாணிக்கம் என்னும் செட்டியிடத்தில் அருமையான ஒரு வாத்து இருந்தது. அது

பிரதிதினமும் ஒவ்வோர் பொன் முட்டை இடுவது வழக்கம். தினம் ஒரு முட்டையைக் காணவே அவனுக்குப் பேராசை பெருகிற்று. உடனே அவன் தனக்குள் யோசிக்கலானான்.

2. 'நான் ஏன் பிரதிதினமும் ஒரு முட்டைக்காகக் காத்திருக்கவேண்டும். இந்த வாத்தை யாராவது பிடித்துக்கொண்டால் அப்புறம் எனக்கு முட்டை எப்படி அகப்படும்? ஆகையால் வாத்தைக் கொன்று ஒரே முறையில் எல்லா முட்டைகளையும் எடுத்துக்கொள்வதே நலம்' என்று இப்படித் தன் மனதில் யோசித்தான்.

3. இப்படி அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போது வாத்து அவன் கிட்ட வந்தது. அவன் அதைப் பிடித்துக் கொல்ல எத்தனித்தான். அப்பொழுது அவனுடைய தகப்பனார் அவனை நோக்கி 'அடா மூடா! இப்படிச் செய்வார் உண்டா? வாத்து பிரதிதினமும் ஒரு முட்டைதான் இடும். அதைக் கொன்று எல்லா முட்டைகளையும் ஒரே முறையில் எடுக்க முயல்வது மூடத்தனம்' என்று சொன்னார். அதற்கு மகன் 'அப்பா! அப்படியல்ல, வாத்தைக் கொன்றால்தான் எல்லா முட்டைகளையும் எடுக்கலாம்; உங்களுக்கு என்ன தெரியும்' என்று கடுகடுப்பாய்ச் சொன்னான்.

4. பிறகு அவன் அந்த அருமையான வாத்தைக் கொன்றுவிட்டு அதின் வயிற்றைக் கீறிப் பார்த்தான். அதில் ஒரு பொன் முட்டையும் அகப்படவில்லை. ஐயோ பாவம்! அவன் அதிக ஆசைப்பட்டு உள்ளதையும் இழந்தான்.

5. அவன் தான் செய்த மூடச் செயலைப் பற்றி நினைத்து அழுதான்; உதட்டைக் கடித்துக் கையை நெரித்துக்கொண்டான். என்ன பிரயோசனம்? போனது வருமா? வரவே வராது.

6. நாம் மிதமிஞ்சி ஆசைப்பட்டால் நமக்கு உள்ளதும் போய்விடும்.

'அதிக ஆசை அதிக நஷ்டம்.'

23. சாதாரண பழமொழிகள்

1. அகதிக்குத் தெய்வமே துணை.
2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
3. அரசனை நம்பி புருஷனை இழக்கலாமா?
4. அடாது செய்தவர் படாது படுவர்.
5. அரசன் அன்று அறுக்கும், தெய்வம் நின்று அறுக்கும்.
6. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
7. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.
8. ஆயிரம் பெயரைக் கொன்றவன் அரை வைத்தியன்.
9. ஆர் குத்தியும் அரிசியாக வேண்டும்.
10. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை.

7797

11. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
12. ஆனைக்கும் அடி சறுக்கும்.
13. இருப்புத்தூணைச் செல்லு அரிக்குமா?
14. இலவு காத்த கிளிபோல் நிற்கிறான்.
15. இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?
16. இறைத்த கிணறு ஊறும்.
17. இல்லாதது பிறவாது, அள்ளாதது குறையாது.
18. இனம் இனத்தோடு வெள்ளாடு தன்னோடு.
19. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா?
20. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
21. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
22. உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி.
23. உனக்கும் பே பே, உன் அப்பனுக்கும் பே பே.
24. உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்.

24. சிறைச்சாலைகளின் உபயோகம்

1. கைதிகளை அடைத்துவைக்கும் வீட்டுக்குச் சிறைச்சாலை என்று பெயர். அவ்வீட்டை மறியற்கூடம் என்று சொல்வதுமுண்டு.

2. சகலவிதமான குற்றங்களையும் தடுப்பதற்காகவே சிறைச்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருடுதல், சண்டையிடுதல், பொய்ச்சாட்சி சொல்லுதல் முதலிய குற்றங்களைச் செய்கிறவர்களை ராஜாங்கத்தார் முதலில் விசாரணை செய்கிறார்கள். குற்றவாளிகளென்று ருசுவான பின்பு அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புகிறார்கள்.

3. சிறைச்சாலையி லிருப்பவர்களுக்குக் கைதிகளென்று பெயர். அவர்களுக்குச் சுயாதீனம் கிடையாது. அவர்கள் குறித்த காலங்களில் வேலை செய்யவேண்டும். மற்றக் காலங்களில் அவர்களை அறைகளில் அடைத்து வைப்பார்கள்.

4. தங்களுக்கு இஷ்டமான உடுப்பை உடுக்கவாவது, சாப்பாட்டைச் சாப்பிடவாவது கூடாது. சிறைச்சாலையில் கொடுக்கப்படும் உடுப்பையே தரிக்கவேண்டும்; அங்கு கொடுக்கப்படும் ஆகாரத்தையே சாப்பிடவேண்டும்.

5. வேலை செய்யாது சும்மா இருக்கும்போது கைதிகள் தாங்கள் செய்த குற்றங்களைப்பற்றி உணருகிறார்கள். தாங்கள் முன்னிருந்த நிலைமையையும் இப்பொழுது படும் கஷ்டங்களையும்

ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். ஐயோ! குற்றம் செய்து இப்படி அகப்பட்டுக்கொண்டோமே என்று வருத்தப்படுகிறார்கள்.

6. இப்படி வருத்தப்படுவதினால் அவர்கள் தங்கள் கெட்ட வழிகளை விட்டு விலகி நல்லவர்களாக நேரிடுகிறது. குற்றம் செய்பவர்களுக்குத் தண்டனை யுண்டு என்னும் சத்தியம் அவர்கள் மனதில் நன்றாய்ப் பதிகிறது. அநேகர் சிறைச்சாலையைவிட்டு வெளிப்படும்போது இனிமேல் நாம் சிறைச்சாலைக்கு வரக்கூடாது என்னும் தீர்மானத்தோடு புறப்படுகிறார்கள்.

7. சிறைச்சாலைகள் துஷ்டரை நல்வழிப் படுத்தும் வீடுகள். நல்லவர்களுக்கு அங்கே வேலையில்லை. கைதியாய்ச் சிறைச்சாலைக்குப் போவது அவமானம். பிள்ளைகளே! நீங்கள் உங்கள் உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டு நல்லவர்களாய் நடவுங்கள். அப்பொழுது சிறைச்சாலைக்கு நீங்கள் தூரமாயிருப்பீர்கள்.

25. கிளைவ் பிரபு

1. கிளைவ் ஓர் அங்கிலேய பிரபு. அவரை நாம் அவசியம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். பிள்ளைகளே! அவரை முன் எப்போதாவது நீங்கள் பார்த்ததுண்டா? இல்லை. நீங்கள் ஒருபோதும் பார்த்திருக்கமாட்டீர்கள். அவர் மகா சிறந்த வீரர். அவர்தான் நமது தேசத்தில் அங்கிலேய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தவர்.

2. அவருக்குக் கிளேவ் துரை என்று பெயர். அவருடைய தகப்பன் மிகவும் ஏழை; ஆகையால் அவருடைய சிற்றப்பனே அவரை வளர்த்துவந்தார். மற்றப் பிள்ளைகளோடு சண்டைசெய்வது அவருக்கு வெகு பிரீதி.

3. கிளேவ் மகா தைரியசாலி. அவரோடு சமமான வயதுடைய பிள்ளைகளுக்கெல்லாம் அவரே தலைவர். அவர் எப்பொழுதும் குறும்பு செய்துகொண்டே இருப்பார். ஒருமுறை அவர் ஓர் கோயிலின் கோபுரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டார். வழிப்போக்கர், ஐயோ! பையன் விழுந்துவிடப்போகிருனே என்று விசனப்பட்

டார்கள். அப்பால் அவர் கீழே இறங்கிவந்தார்.

4. சிறுவயதில் அவர் புத்திசாலி யென்று காண்பித்தார்; பதினேழு வயதுடையவரா யிருக்கும்போது இந்தியாவிற்கு வந்தார். முதலில் அவர் சென்னபட்டணத்திலே வந்து இறங்கிக் கணக்கப்பிள்ளை வேலை பார்த்தார். பிரதிதினமும் வேடிக்கையாய்ப் பொழுதுபோக்கின அவருக்கு இந்த வேலை கஷ்டமாயிருந்தது. ஆனாலும் தன் வேலையை அவர் சரியாய்ப் பார்த்துக்கொண்டு வந்தார்.

5. கணக்கப்பிள்ளை வேலை பார்ப்பதைவிடச் சேனைக்குத் தலைவராயிருப்பது நலமென்று அவர் எண்ணினார். அக்காலத்தில் அங்கிலேயருக்கும் பிராஞ்சியருக்கும் நடந்த சண்டையில் அவர் தைரியசாலி யென்று காட்டினார். ஆகையால் அவர் சேனைக்குத் தலைவரானார்.

6. பிறகு அவர் பலவிதமாய்த் தன் சாமர்த்தியத்தைக் காண்பித்தார். பிளாசி என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் கிளைவ் மிக்க பிரசித்தி பெற்றார். இந்த யுத்தம்தான் இந்தியாவில் அங்கிலேயருடைய அதிகாரத்தை ஸ்தாபித்தது. ஆகையால் இது மிகவும் விசேஷமான யுத்தம்.

26. முதுமொழிக்காஞ்சி

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்,
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.
2. மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.
3. வன்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.
4. இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.
5. நலனுடை மையினு ணுச்சிறந் தன்று.
6. குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.
7. கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
8. முற்பெரு கலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று.
9. பேரிற் பிறந்தமை யீரத்தி னறிப.
10. ஈர முடைமை யீகையி னறிப.
11. கற்ற துடைமை காட்சியி னறிப.
12. ஏற்ற முடைமை யெதிர்கோளி னறிப.
13. சூத்திரஞ் செய்தலிற் கள்வனை லறிப.
14. சொற்சோர் வுடைமையி னெச்சோர்வு மறிப.
15. சீருடை யாண்மை செய்கையி னறிப.
16. நிறையச் செய்யாக் குறையினைப் பழியார்.
17. செய்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.
18. வறியோன் வள்ளிய னன்மை பழியார்.
19. சிறியா ரொழுக்கஞ் சிறந்தோரும் பழியார்.
20. பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது.

21. நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது.
22. அறிவிலி துணைப்பாடு தனிமையிற்றுவ்வாது.
23. தாஞே ரின்பு தனிமையிற் றுவ்வாது.
24. நீரறிந் தொழுகாதா டார மல்லள்.
25. தார மாணு ததுவாழ்க்கை யன்று.
26. ஈரமல் லாதது கிளைநட் பன்று.
27. நேரா நெஞ்சத்தோ னட்டோ னல்லன்.
28. தேராமற் கற்றது கல்வி யன்று.
29. மக்கட் பேற்றிற் பெரும்பே றில்லை.
30. நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.
31. இரத்த லின்னுங் கிளிவர வில்லை.
32. இரப்போர்க் கீதலி னெய்துஞ் சிறப்பில்லை.
33. பேரறிவி ஞேனினிது வாழாமை பொய்.
34. கள்ளுண் போன்சோர் வின்மை பொய்.
35. கால மறியாதோன் கையுறல் பொய்.
36. ஓங்கல்வேண்டுவோ னுயர்மொழி தண்டான்.
37. கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.
38. நிற்றல்வேண்டுவோன் றவஞ்செய றண்டான்.
39. வாழ்க்கைவேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.
40. மிகுதி வேண்டுவோன் றகுதி தண்டான்.
41. இன்பம் வேண்டுவோன் துன்பந் தண்டான்.
42. துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.
43. ஏமம் வேண்டுவோன் முறைசெய றண்டான்.

27. சுண்டெலிகள் சபைகூடியது

1. ஒரு வயலிலிருந்த சுண்டெலிகள் எல்லாம் பூனையின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஒரு சபை கூட்டி, பூனையை எப்படித் தொலைப்பது என்று ஆலோசனை பண்ணின. சுண்டெலிகள் எல்லாம் வட்டமாய் உட்கார்ந்து கொள்ள, ஒரு கிழச்சுண்டெலி மாத்திரம் மத்தியில் சபாநாயகராக உட்கார்ந்திருந்தது.

2. 'பூனைகளை யெல்லாம் கொன்றுவிடுவதே தக்க வழி' யென்று ஒரு சுண்டெலி சொல்லிற்று. 'அவைகளை எப்படிக் கொன்றுவிடுவது?' என்றது மற்றொன்று. 'நாம் ஒரு நாயைச் சிநேகிதஞ் செய்துகொண்டால் பூனை நமக்குக் கிட்ட வரமாட்டாது' என்றது வேறொன்று. 'பூனை

வரும்போது அதின் பசி அடங்கும்படி ஏதாவது ஆகாரம் கொடுப்போமானால் அது அவ்வாகாரத்தைச் சாப்பிட்டுத் தன் பசியை ஆற்றிக் கொள்ளும். அப்பால் நமக்கு ஒரு தீங்கும் செய்யாது' என்றது பின்னுமொரு சுண்டெலி.

3. இப்படியே சுண்டெலிகளெல்லாம் தங்களுக்குத் தோன்றியபடி சொல்லிக்கொண்டன. ஆனால் அவை சொன்ன உபாயங்கள் எல்லாம் பயனற்றவை என்று தள்ளப்பட்டன.

4. கடைசியாய் ஒரு சிறிய சுண்டெலியின் முறை வந்தது. அது எழுந்து நின்று 'பிரியமான சகோதரரே! பூனையின் தொந்தரவு எங்களால் சகிக்க முடியவில்லை. பூனைகள் எல்லாவற்றையும் கொன்றுவிடுவது எளிதல்ல. பூனை வருவதைத் தெரிந்துகொண்டால் நாம் ஒளித்துக்கொள்ளலாம். ஆகையால் பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டித் தொங்கவிட்டால் அது வரும்போது நாம் தப்பித்துக்கொள்ளலாம்' என்று சொல்லிற்று.

5. எல்லா யோசனைகளிலும் இதுவே சிறந்தது என்று எல்லாச் சுண்டெலிகளும் ஒப்புக்கொண்டன. அவைகள் இச்சிறு சுண்டெலியை மெச்சிக்கொண்டன.

6. இதுவரையில் வாய் திறவாமல் சும்மாவிருந்த ஒரு கிழச்சுண்டெலி இப்பொழுது பேச ஆரம்பித்தது. அது எழுந்து 'சிநேகிதரே! நீங்கள் சொன்ன எல்லாவற்றையும் கேட்டேன். பூனையின் கழுத்தில் மணியைக் கட்டு

வது நல்ல ஏற்பாடுதான்; ஆனால் அம்மணியைக் கட்டுவது யார்?' என்றது.

7. உடனே சுண்டெலிகள் யோசிக்க ஆரம்பித்தன. மணியை எப்படிக் கட்டுவது? யார் கட்டுவது? என்று ஒவ்வொன்றும் தனக்குள் ஆலோசித்து 'நானல்ல, நானல்ல' என்று சொல்லிக்கொண்டது. கடைசியில் மணி கட்டுவதற்கு ஒருவரும் சம்மதிக்கவில்லை. இச்சமயத்தில் பூனை வந்தது. சுண்டெலிகள் எல்லாம் ஓட்டம் பிடித்தன.

28. பிரயாணிகளும் கரடியும்

1. இரண்டுபேர் ஒரு காட்டின் வழியாகப் பிரயாணம் செய்ய நேரிட்டது. அந்தக்

காடோ மிகவும் அபாயகரமானது. ஆகையால் ஏதாவது ஆபத்து நேரிட்டால் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்வதாக ஏற்பாடு பண்ணிக் கொண்டு அவர்கள் இருவரும் காட்டில் நுழைந்தார்கள்.

2. காட்டில் சிறிதுதூரம் போனவுடனே ஒரு சத்தம் கேட்டது. அது என்னவென்று அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுது ஒரு பெரிய கரடி புதரிலிருந்து வெளிப்பட்டு வருவதை அவர்கள் கண்டார்கள். கரடி அவர்களைக் கண்டவுடன் துரத்த ஆரம்பித்தது.

3. பிரயாணிகளில் ஒருவன் ஓடிப்போய் ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். மற்றவன் பூமியில் குப்புற விழுந்து மூச்சையடக்கிக் கொண்டு பிரேதம்போல் கிடந்தான். கரடி வந்து நிலத்திலே கிடப்பவனைப் புரட்டி மோந்து பார்த்தது. அவன் மூச்சும் பேச்சும் இல்லாமல் கிடப்பதைக் கண்டு இறந்துவிட்டானென்று எண்ணிக்கொண்டது.

4. ஆயினும் அதின் ஆசை தீரவில்லை. திரும்பியும் புரட்டிப் பார்த்தது. உயிர் இருப்பதற்குரிய குறி ஒன்றும் இல்லாமையால் பிணமென்று தீர்மானித்து அவனுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. பிறகு அவ்விடத்தில் சிறிது நேரம் சுற்றிக்கொண்டு நின்றுவிட்டு வந்த வழியே காட்டுக்குள் ஓடிப்போயிற்று.

5. மரத்தின்மேல் ஏறி இருந்தவன் இவைகளை யெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

இதென்ன புதுமை? காட்டிலிருந்து நம்மைத் துரத்திக்கொண்டு வந்த கரடி அவனுடைய காதிற்குள் இரகசியமாய் ஏதோ சொல்லிற்றே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

6. பிறகு அவன் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்து பிணம்போல் கிடந்தவனைப் பார்த்து 'சிநேகிதா! உயிர் பிழைத்தாயா?' என்றான். ஆம்! ஆம்! பிழைத்தேன் என்றான் மற்றவன். பிறகு மரத்திலிருந்தவன் 'சிநேகிதா உன் காதில் வாயை வைத்து அக்கரடி ஏதோ சொல்லிற்றே, அது என்ன?' என்று கேட்டான்.

7. அவனுக்கு இக்கேள்வி மிகவும் கோபத்தை உண்டாக்கிற்று. ஆபத்துக் காலத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக வாக்குப்பண்ணியும் அப்படிச் செய்யாத அவனை அவமானப்படுத்த அவன் எண்ணினான். உடனே அவனைப் பார்த்து 'கரடி என்ன சொல்லிற்று என்றா கேட்கிறாய்? இனிமேல் உன்னைப்போலும் சிநேகிதரிடத்தில் நம்பிக்கை வைக்கவேண்டாமென்று சொல்லிற்று' என்று சொன்னான்.

'ஆபத்துக் காலத்தில் உதவாத சிநேகிதனில்
நம்பிக்கை வைக்காதே.'

29. சன்மார்க்கன் பலனடைந்தது

1. மாணிக்கம் இரத்தினம் என்னும் சிறுவர் இரண்டுபேர் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் போகும் வழியில் மாமரம்

ஒன்றிருந்தது. அம்மரத்தில் மாம்பழங்கள் ஏராளமாய்ப் பழுத்துத் தொங்கின. மரத்தின் கீழ் ஒரு கூடை நிறைய மாம்பழமும் வெறும் கூடையொன்றும் இருந்தன.

2. மாணிக்கம் இரத்தினத்தை நோக்கி, 'இதோ! இந்தப் பழங்களைப் பார்; இங்கே ஒருவரையும் காணோம்; நாம் யாருக்கும் தெரியாமல் இந்தக் கூடையோடு பழத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் விடலாம் வா' என்றான். இரத்தினம், 'அப்படிச் செய்வது சரியல்ல; அது பிறருடைய சொத்தாயிற்றே' என்றான்.

3. மாணிக்கம், 'போ! போ! இங்கே யாருமில்லையே. நாம் பழங்களை எடுத்துக்கொண்டு போவது யாருக்குத் தெரியும்? நீ சும்மாவிரு; நீயும் நானும் சரிபாகமாகப் பங்கிட்டுக்கொள்ளலாம்' என்று சொல்லிக் கூடையிலுள்ள பழங்களில் பாதியை மற்றக் கூடையில் கொட்டினான். இரத்தினம் 'நீ சொல்வது சரிதான். ஆனாலும் அது தப்பிதமல்லவா? பிறனுடைய சொத்தை அவனுடைய அனுமதியில்லாமல் நாம் எடுக்கலாமா? அப்படிச் செய்வது திருட்டாகும். திருடுவது மகா தோஷம்' என்றான். மாணிக்கம் அவன் சொன்னவைகளை விளையாட்டாக எண்ணினான்.

4. அப்பொழுது இரத்தினம் 'என்னடா மாணிக்கம்! நீ இவ்வளவு அசடு என்று ஒருபோதும் நான் எண்ணவில்லை. திருடுதல் தோஷமல்லவென்று நீ நினைக்கிறாப்போல் காண்கிறது.

ஒருநாள் சில சேவகர் எங்கள் வீட்டுப் பக்கமாக ஒரு திருடனைக் கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள். நான் அத்திருடனைப்பற்றி என் தகப்பனாரிடத்தில் விசாரித்தேன். அவர் அப்பொழுது எனக்குச் சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அவைகளை உனக்குச் சொல்லட்டுமா?' என்றான்.

5. மாணிக்கம் 'சொல்லு பார்க்கலாம்' என்றான். அப்பொழுது இரத்தினம் 'முதலில் சிறிய தப்பிதமொன்றை நாம் செய்ய ஆரம்பித்தால் பிறகு வரவரப் பெரிய தப்பிதங்களைச் செய்வதற்கு இடமுண்டாகும். இந்த அற்ப மாம்பழத்தை நாம் திருடும்போது தோட்டக்காரன் நம்மைப் பாராவிட்டாலும் எங்கும் நிறைந்திருக்கிற கடவுளுக்கு இது தெரியாதிருக்குமோ?'' என்றான்.

6. இதைக் கேட்டவுடன் மாணிக்கம் சற்று ஆலோசிக்கத் தொடங்கினான். இரத்தினம் சொன்னவைகளைக் கேட்டு அவன் மனச்சாட்சி அவனை வருத்தியது. சீ! நான் திருட எத்தனித்தது மகா தப்பிதமென்று அவன் உணர்ந்தான். உணரவே திருடவேண்டுமென்னும் எண்ணத்தை முற்றிலும் விட்டுவிடத் தீர்மானித்தான்.

7. உடனே அவன் இரத்தினத்தை நோக்கி, 'சிநேகிதா! நீ இப்பொழுது சொல்லியது எல்லாம் சரிதான். நாம் இப்படிப்பட்ட துர்விஷயங்களில் பிரவேசிப்பது சரியல்ல. நீ எனக்கு

நற்புத்தி சொன்னதற்காக மிகவும் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். இனி இவ்விடத்தில் நிற்கக்கூடாது, வா வீட்டுக்குப் போகலாம்' என்றான்.

8. இப்படி இவர்களுக்கிடையில் நடந்த சம்பாஷணையை அத்தோட்டக்காரன் மறைவாக விருந்து கேட்டுக்கொண்டிருந்தான். அவன் புத்திமானாகிய இரத்தினத்திற்குச் சில மாம்பழங்களைக் கூடையிலிருந்து எடுத்துக் கொடுத்து, 'மகனே! உன் நன்னடக்கையை மெச்சினேன்; நீ என்றும் சிரஞ்சீவியாய் வாழ்ந்திரு' என்று அவனை ஆசீர்வதித்துவிட்டுப் போனான். இரத்தினம் மாணிக்கத்திற்கும் அப்பழங்களில் சிலவற்றைக் கொடுத்து அவனைச் சந்தோஷப்படுத்தினான்.

'நல்லவர்களுடன் சகவாசம் செய்தால்
நன்மையுண்டாகும்.'

30. வானம்பாடியும் அதின் குஞ்சுகளும்

1. ஒரு வயலில் ஒரு வானம்பாடி கூண்டு கட்டிக் குஞ்சு பொரித்திருந்தது. வயலில் பயிர் முளைத்து வளர்ந்திருந்தபடியால் அது கூண்டு கட்டியிருப்பது யார் கண்ணுக்கும் அகப்படவில்லை. ஆனாலும் பயிரில் கதிர்கள் உற்பத்தியாகி முற்றிவரவே வானம்பாடிக்கு ஆலோசனை உண்டாயிற்று. அறுப்புக்காரர் வந்து பயிரை

அறுக்கும்போது தன் குஞ்சுகளுக்கு அபாய முண்டாகுமென்று அது பயந்தது.

2. வானம்பாடி இரைக்காக வெளியே போகும்போதெல்லாம் தன் குஞ்சுகளை நோக்கி, 'நானில்லாத வேளையில் இங்கு என்ன நடந்தாலும் அதை எனக்கு உடனே தெரிவிக்கவேண்டியது' என்று சொல்லிப்போவது வழக்கம். இப்படியிருக்க ஒருநாள் அந்த வயலுக்குச் சொந்தக்காரன் அங்கு வந்து 'தானியம் முற்றிவிட்டது; நான் எனது அயலாரை இட்டுக்கொண்டு வந்து அறுப்பறுக்கவேண்டும்' என்று சொல்லிப் போய்விட்டான். இதைக் குஞ்சுகள் தாய்க்குச் சொல்லின.

3. வானம்பாடி குஞ்சுகளை நோக்கி 'நீங்கள் பயப்படவேண்டாம். அவன் அறுப்பை அறுப்

பதற்குத் தன் அயலாரை நம்பியிருக்கிறது போல் தெரிகிறது. அப்படியானால் அபாயம் இப்பொழுது ஒன்றுமில்லை. நாம் இன்னும் சில காலம் இங்கே இருக்கலாம். நீங்கள் இன்னும் நடப்பதை எனக்குத் தெரிவியுங்கள்' என்று சொல்லிப் பறந்துபோயிற்று.

4. மறுநாள் சொந்தக்காரனும் அவன் மகனும் வயலுக்கு வந்து சுற்றிப் பார்த்தார்கள். பிறகு தகப்பன் மகனைப் பார்த்து, நம் அயலார் உதவி செய்வார்களென்று காத்திருந்தேன், அவர்களோ வரவில்லை. நாளைக்கு நமது சுற்றத்தார்களை அழைத்து வந்து அறுப்பு அறுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு இருவரும் போய் விட்டார்கள்.

5. இச்சமாசாரத்தைக் குஞ்சுகள் சாயங்காலம் தாய்க்கு அறிவித்தன. தாய், 'நாளைக்கும் உங்களுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாது; பயப்படவேண்டாம்' என்று சொல்லி இரை தேடப் பறந்துபோயிற்று.

6. மறுநாள் சொந்தக்காரனும் அவன் மகனும் வந்து சுற்றத்தவர்கள் வராததைக்குறித்து விசனப்பட்டார்கள். பிறகு 'நாங்களே நாளைய தினம் வந்து அறுப்பறுத்து நம்முடைய வேலையை முடித்துக்கொள்ளவேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்டு போய்விட்டார்கள். குஞ்சுகள் இதையும் தாய்ப்பட்சி திரும்பி வந்தவுடன் சொல்லின.

7. தாய் 'நாம் இனி இங்கிருந்தால் அபாயம் நேரிடும். நாம் உடனே இவ்விடத்தைவிட்

டுப் புறப்படவேண்டும்' என்று சொல்லி, குஞ்சுகளை ஒன்றொன்றாய் எடுத்துக்கொண்டு வேறோர் வயலுக்குப் போய்ச் சுகமாய் வாழ்ந்தது. 'வயலுக்குச் சொந்தக்காரன் மறுநாள் மகனுடன் வந்து, அறுப்பறுக்கத் தொடங்கினான். ஆனால் தக்க காலத்தில் அறுக்காததினால் கதிரிலிருந்து தானியம் உதிர்ந்து அதிக நஷ்டமாய்ப்போயிற்று. ஐயோ நாம் மற்றவர்களை நம்பினதினால் நஷ்டமாயிற்றே' என்று விசனப்பட்டார்கள்.

'உன் வேலையை நீயே செய், மற்றவர்கள் செய்வார்களென்று காத்திராதே.'

31. காணமற்போன ஒட்டகம்

1. ஓர் மகம்மதிய சன்னியாசி காட்டின்வழியாய்ப் பிரயாணம் செய்தான். அப்போது இரண்டு வியாபாரிகள் அவனுக்கு எதிர்ப்பட்டார்கள். சன்னியாசி அவர்களைப் பார்த்து 'உங்கள் ஒட்டகமொன்று காணமற்போயிற்றா?' என்றான். அவர்கள் 'ஆம்' என்றார்கள்.

2. சன்னியாசி 'அவ்வொட்டகத்திற்கு வலதுகண் குருடும் இடதுகால் முடமும் அல்லவா?' என்றான். அவர்கள் 'மெய்தான்' என்றார்கள். பின்னும் சன்னியாசி அவர்களை நோக்கி 'அவ்வொட்டகத்திற்குப் பல்லொன்று விழுந்துபோயிற்றல்லவா?' என்றான். அவர்கள் 'சரிதான்' என்று ஒத்துக்கொண்டார்கள்.

3. அப்பால் சன்னியாசி, 'அவ்வொட்டகத்தின்மேல் ஒரு பக்கத்தில் கோதுமையும் மறுபக்கத்தில் தேனும் ஏற்றியிருக்கிறதல்லவா?' என்ருன். அவர்கள் 'அப்படித்தான்' என்ருர்கள்.

4. பிறகு அவர்கள் சன்னியாசியை நோக்கி 'நீர் இவ்வளவு சரியாய் எல்லாவற்றையும் சொல்லுகிறபடியால், நீர் அவ்வொட்டகத்தைப் பார்த்திருக்கவேண்டும். அது இருக்குமிடத்தைச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். சன்னியாசி 'நான் உங்கள் ஒட்டகத்தைக் கண்டதுமில்லை; அதைக்குறித்துக் கேள்விப்பட்டதுமில்லை' என்ருன். உடனே வியாபாரிகள் இவன் ஒட்டகத்தை மறைத்து வைத்துக்கொண்டு மோசம்செய்யப் பார்க்கிருன் என்று

சொல்லி அவனை நியாயாதிபதி யிடத்தில் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

5. அப்பொழுது நியாயாதிபதி 'நீ இவர்கள் ஒட்டகத்தைக் கண்டதுண்டா?' என்றார். அவன் இல்லை என்றான். நியாயாதிபதி 'நீ எப்படி இவ்வித குறிப்புக்களைச் சொன்னாய்?' என்றார். அதற்குச் சன்னியாசி 'ஐயனே, வழியே போகும்போது ஒரு ஒட்டகத்தின் காலடிச் சுவட்டைக் கண்டேன். மனிதர் காலடி இல்லாததினால் அது தப்பி வந்தது என்று அறிந்தேன்.

6. வழியின் ஒரு பக்கத்திலுள்ள புல்லைமாத்திரம் மேய்ந்ததினால் அதற்கு ஒரு கண் குருடு என்று தெரிந்துகொண்டேன். அதின் காலடிகளில் ஒன்று மற்றவைகளைப்போல் பூமியில் பதிந்திராமையால் அது முடமென்று கண்டேன். அது மேய்ந்த புல்லில் நடுப்புல் கடிபடாதிருந்தமையால் அதற்கு ஒரு பல் இல்லையென்று அறிந்தேன்.

7. அது நடந்துபோன வழியின் ஒரு பக்கத்தில் ஈக்களும், மறுபக்கத்தில் எறும்புகளும் மொய்த்துக்கொண்டிருந்தபடியால் அதின்மேல் கோதுமையும் தேனும் ஏற்றியிருந்ததென்று உணர்ந்தேன்' என்று இப்படிச் சொன்னான்.

8. நியாயாதிபதி அவன் யூகத்தை மெச்சி அவனுக்குத் தக்க வெகுமதி கொடுத்தனுப்பினார்.

ஆகையால் கண்ணால் கண்டவை மாத்திரமல்ல, புத்தியாய் யூகித்தறியவேண்டிய விஷயங்களும் உண்டென்பதை நாம் அறியவேண்டும்.

32. கல்விச் செல்வம்

1. வெள்ளி அபரஞ்சி முத்தில்—மேலாம்
தெள்ளிய கல்வி திறமல்லோ மைந்தா.

2. கனத்தைத் தரும் கல்வி—பின்னும்
தனத்தைத் தருமிது சத்தியம் மைந்தா.

3. சன்மார்க்கம் கல்வியால் உண்டாம்—மற்ற
நன்மார்க்கமெல்லாம் அதின்செயல் மைந்தா.

4. தீயர் கவர்வதோ இல்லை—அது
நேயரைச் சேர்த்திடும் நிச்சயம் மைந்தா.

5. தீயால் அழியாது கல்வி—நிதம்
நீயாய் வளர்த்திட்டால் நிற்குமே மைந்தா.

6. கல்வியை மன்னர் மதிப்பார்—அந்தச்
செல்வியில் லாவிடில் சிறப்பேது மைந்தா.

33. சுத்தமான ஆகாயத்தின் பிரயோசனம்

1. நம்மைச் சுற்றிலுமுள்ள மரங்களும் செடிகளும் ஆடி அசைந்துகொண்டிருப்பதை நாம் பலமுறையும் காண்கிறோம். நமது உடம்பில் ஏதோ மோதுவதுபோல நமக்குப் புலப்படு

கிறது. விளக்கை ஏற்றிவைத்தால் சில சமயங்களில் வெளிச்சம் அவிந்துபோகிறது. இவைகளுக்கெல்லாம் காரணமென்ன ?

2. இவைகள் எல்லாவிற்றிற்கும் காரணமான ஓர் வஸ்து உண்டு. அதற்கு, ஆகாயம் அல்லது காற்று என்று பெயர். அதை நாம் கண்ணால் காணக்கூடாவிட்டாலும் அது பூமியெங்கும் வியாபித்து பூமியின்மேல் உயரத்தில் நெடுந்தூரமளவும் பரவியிருக்கிறது. அது மிகவும் பிரயோசனமானது. அது இல்லாவிட்டால் நாம் பிழைத்திருக்கமாட்டோம். நெருப்பு எரியாது; தாபரவர்க்கங்கள் உண்டாகா.

3. வயல் வெளிகளிலும், தெருக்களிலும், மைதானங்களிலும், மலைகளிலும் இன்பமான இளங்காற்று எப்பொழுதும் வீசிக்கொண்டிருக்கிறது. அந்தக் காற்று, அழுகின வஸ்துக்களிலிருந்து உண்டாகும் விஷவாயுக்களைச் சிதறடித்துச் சுத்திசெய்கிறது.

4. நாம் சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்று மிகவும் அவசியமானது. அது நமது இரத்தத்தைச் சுத்திசெய்து அதிலுள்ள அசுத்தமான வஸ்துக்களை அகற்றுகிறது. நாம் உள்வாங்கும் காற்று சுத்தமானதாகவே உட்செல்லுகிறது. பிறகு அது வெளியே வரும்போது அசுத்தமாகி விடுகிறது

5. நீ படுத்துக்கொள்ளும் அறை சுத்தமாயிருக்கவேண்டும். படுக்கை யறைக்கு ஜன்னலிருக்கவேண்டும். அப்படி யிருந்தால் தான்

சுத்த ஆகாயம் உட்பிரவேசித்து, நீ மூச்சுவிடும் போது உண்டாகிற அசுத்தமான காற்றை வெளியே தள்ளி அறையைச் சுத்தமாக்கும்.

6. அசுத்த ஆகாயம் மிகவும் அபாயத்திற் கேதுவானது. ஜன்னலில்லாத அறையில் கதவை மூடிக்கொண்டு அநேகர் படுத்துக்கொண்டால் மரணமுண்டாகும். அநேக வருஷங்களுக்கு முன்னே கல்கத்தாவிலே ஒரு இருட்டறையில் நூற்று நாற்பத்தாறுபேரை அடைத்து வைத்தார்கள். மறுநாள் அவ்வறையைத் திறந்து பார்த்தபோது இருபத்து மூன்றுபேர் மாத்திரம் பிழைத்திருந்தார்கள்.

7. பிள்ளைகளே! நீங்கள் சுத்தமான காற்றைச் சுவாசியுங்கள். சுத்த ஜலத்தைப் பானம் பண்ணுங்கள். நன்றாய்க் காற்று வீசுகிற வெளியான விடங்களில் ஓடி ஆடி விளையாடுங்கள். அப்பொழுது சுகதேகிகளாயிருப்பீர்கள். நெடுங்காலம் ஜீவித்திருப்பீர்கள்.

34. வீண் ஆலோசனை செய்த வியாபாரி

1. வடக்கேயுள்ள ஒரு சிறந்த பட்டணத்தில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் பேர் ஜேசிங். அவன் சில்லறைச் சாமான்களை ஓர் கூடையிலிட்டுத் தலைமேல் வைத்துக்கொண்டு போய் வீடுவீடாய் விற்று ஜீவனம்செய்வது வழக்கம்.

2. இப்படி அவன் வியாபாரம் செய்வதினால் அவனுக்கு அதிக லாபம் கிடைத்தது.

அந்த லாபத்தைக்கொண்டு அவன் மேலும் மேலும் தன்னுடைய வியாபாரத் தொழிலை

விருத்தி பண்ணிக்கொண்டு வந்தான். அண்டை அயலிலுள்ள சிநேகிதர் அவனைக்குறித்து மிக்கவும் சந்தோஷப்பட்டார்கள்.

3. ஒருநாள் அவன் ஒரு கூடை நிறையக் கண்ணாடிச் சாமான்களை வாங்கி வைத்துக்கொண்டு வழக்கம்போல வர்த்தகம் செய்யப் போனான். சிறிதுதூரம் போனபின் ஆயாசத்தினால் அவன் கூடையைப் பக்கத்தில் வைத்துவிட்டு ஒரு வீட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்துகொண்டு பின் வருமாறு யோசிக்கத் தொடங்கினான்:—

4. நான் இக்கூடையிலுள்ள இத்தனை சாமானையும் விற்று வரும் லாபத்தைக்கொண்டு ஒரு பசு வாங்குவேன். அந்தப் பசு கன்றுபோடும். பசுவின் பாலை விற்று பின்னுமொரு பசு வாங்குவேன். இப்படியே என்னிடத்தில் பல பசுக்கள் சேரும். இவைகளால் வரும் லாபத்தைக் கொண்டு நான் இரத்தின வியாபாரியாவேன்.

5. பின்னும் இவ்வர்த்தகத்தையே விடாது நடத்திக்கொண்டு வருவதினால் நான் மிக்க தனவந்தனாவேன். எனக்குள்ள செல்வத்தைக் கொண்டு காணி, பூமி, வீடு, வாசல், வண்டி, குதிரை முதலியவைகளை இஷ்டப்படி வாங்கிச் சுகமாய் வாழ்ந்திருப்பேன்.

6. என் செல்வத்தைக் கண்டு மயங்கி அநேகர் எனக்கு மணம் பேசுவார்கள். நான் சீக்கிரத்தில் விவாகம் செய்ய ஒத்துக்கொள்ளமாட்டேன். ஆயினும் நமது நாட்டு மந்திரி குமாரத்

தியை விவாகம் செய்துகொள்ளும்படி என்னுடைய உறவுமுறையார் பலவந்தம் செய்வார்கள். அப்படியே அவளை நான் விவாகம் செய்து கொள்ளுவேன்.

7. பிறகு அவள் என்னுடைய வீட்டிலே எனக்கு மனைவியாயிருப்பாள். எனக்கு வேண்டிய பணிவிடைகளை அவள் செய்வாள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும். அக்குழந்தையிடத்தில் நான் மிகவும் அன்பாயிருப்பேன்.

8. சாயங்காலத்தில் 'அவள் வீட்டு வேலை செய்துகொண்டிருக்கும்போது, அக்குழந்தையை என்னிடத்தில் கொண்டுவரும்படி நான் அவளிடத்தில் சொல்லுவேன். வேலைக் கஷ்டத்தினால் அவள் சற்றுத் தாமதிப்பாள். உடனே நான் அவளை இப்படி உதைப்பேன்' என்று சொல்லிக்கொண்டு காலால் கூடையை உதைத்தான். கூடை கீழே விழுந்து சாமானெல்லாம் உடைந்துபோயிற்று.

9. ஜேசிங் தன்னுடைய வேலையைப் பாராமல் வீண் யோசனை செய்ததினால் தனக்கு உள்ளதையும் இழந்தான். ஆகையால் நாம் ஆகாயக் கோட்டை கட்டாமல் நமது வேலையில் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்.

35. நீதிப் பாடல்கள்

கல்வி நலம்

1. கற்கை நன்றே கற்கை நன்றே.

2. பிச்சைபுகினுங் கற்கை நன்றே.

3. கல்லாவொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே.

4. எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகென்பார்.

5. அறிவுடையொருவனை யரசனும் விரும்பும்.

6. அச்சமுள்ளடக்கி யறிவகத்தில்லாக்
கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி
எச்சமற்றேமாந் திருக்கை நன்றே.

7. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

செய்நன்றியறிதல்

8. நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

9. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே-யல்லாத
வீரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

சகவாசம்

10. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

11. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

36. கடிதம் எழுதும் முறை

மனிதன் தனியாயிருந்து காலங் கழிப்பவனல்ல. வேறு மனிதரோடு சேர்ந்து விஷயங்களை நடத்தவேண்டியவனாயிருக்கிறான். ஆகையால் அவன் தன் அபிப்பிராயத்தை மற்றவர்களுக்கு வெளியிடவேண்டி யிருக்கிறது. அப்படி அபிப்பிராயத்தை வெளியிடும்போது இரண்டு விதமாய் வெளியிடலாகும். ஒன்று பேசவேண்டிய விஷயத்தை நேர்முகமாகப் பேசிக்கொள்ளுதல். மற்றொன்று கடிதமூலமாய் விஷயத்தை எழுதித் தெரிவித்தல். ஆகையால் கடிதம் எழுதும் முறையைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

நாம் எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் (1) மேல்விலாசம், (2) உள்ளடக்கம் என்று இரண்டு

பிரிவுகள் உண்டு. மேல்விலாசம் என்பது கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ அவருக்குக் கடிதம் போய்ச் சேர்வதற்கு மிகவும் அவசியமானது. ஆகையால் தபால்காரர் பார்க்கும்படி அது கடிதத்தின் மேற்புறத்தில் எழுதப்படுகிறது.

விலாசம் எழுதும் முறை

சென்னபட்டணம், புரசவாக்கம், வேளாளர் வீதியில் வசிக்கும் ம-ள-ள-ஸ்ரீ, மு. கந்தசாமி முதலியார் அவர்களுக்குக் கொடுப்பது.

இது தமிழ் முறையாம். இம்முறையை அனுசரிக்கும்போது மேல்விலாசம் முழுவதையும் படிக்கவேண்டி யிருக்கிறது ஆகையால் இப்பொழுது ஆங்கில முறையாக மேல்விலாசம் எழுதுவதையே எல்லாரும் கையாடுகின்றனர்.

ஆங்கில முறை

ம-ள-ள-ஸ்ரீ, மு. கந்தசாமி முதலியார்,
வேளாளர் வீதி,
புரசவாக்கம்,
சென்னபட்டணம்.

இம்முறையில் கடிதத்தைப் பெறவேண்டியவர் பெயர் முதலிலும், அவர் வசிக்கும் வீதி

இரண்டாவதாகவும், கிராமம் மூன்ருவதாகவும், பட்டணம் நாலாவதாகவும் எழுதப்படுகிறது. வேண்டுமென்ருல் வீதியில் வீட்டுக் கதவிலக்கமும் போட்டுக்கொள்ளலாம். சிறியவர்களுக்கு எழுதும்போது சிரஞ்சீவி என்றும், பெண்களுக்கு எழுதும்போது ஸ்ரீமதி என்றும், பெண்களில் சிறியவர்களுக்கு எழுதும்போது சௌபாக்கியவதி என்றும் எழுதவேண்டும்:

சிரஞ்சீவி, கா. கோபாலன்

ஸ்ரீமதி, பங்கஜாம்பாள்

சௌபாக்கியவதி, இரத்தினவள்ளியம்மாள்

உள்ளடக்கம்

உள்ளடக்கம் என்பது கடிதத்தின் உட்புறத்தில் எழுதப்பட்டுள்ள விஷயம். கடிதம் எழுத ஆரம்பிக்குமுன் வலது மூலையில் எழுதுவோருடைய விலாசத்தையும் தேதியையும் எழுத வேண்டும்.

68. வேளாளர் வீதி,

புரசவாக்கம் 10—1—1914.

இனி, கடிதத்தைத் தொடங்கும்போது தந்தை, தாய், மாமன், மாமி முதலிய பெரியோர்களுக்கு,

‘தேவரீர் தகப்பனர் அவர்கள் சமுகத்திற்கு வந்தனம் செய்து எழுதுவது’ என்றும், தம்பி, குமாரன், மைத்துனன் முதலிய சிறியோர்க்

ளுக்கு சிரஞ்சீவி என்றும், தங்கை குமாரத்தி முதலியவர்களுக்கு 'சௌபாக்கியவதி' என்றும் எழுதவேண்டும். அந்நியர்களுக்கு 'ம-ா-ா-ஸ்ரீ, ஐயா அவர்களுக்கு' என்றும், நண்பர்களுக்குச் சிநேகிதத்தின் தன்மைக்கேற்றபடி 'எனது அன்புள்ள நண்பருக்கு' அல்லது 'எனது பிராண சிநேகிதருக்கு' அல்லது 'என் அன்புள்ள முனிசாமி முதலியாருக்கு' என்றும் எழுதவேண்டும். கடிதத்தில் எழுதும் விஷயங்களைச் சுலபமான நடையில் இனிமையாய் அழகுபெற எழுதவேண்டும். கடிதத்தை முடிக்கும்போது உறவினருக்கு, குமாரன், சகோதரன் முதலிய முறையைக்குறித்து

இங்ஙனன்

தங்கள் அன்புள்ள குமாரன் அல்லது சகோதரன்

என்றும்,

அந்நியருக்கு

இங்ஙனம்

தங்கள் உண்மையுள்ள

ஊழியன்

என்றும்,

எஜமான் உபாத்தியாயர் முதலியோருக்கு

தங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன்

என்றும் எழுதவேண்டும்.

68. வேளாளர் வீதி,

புரசை 10—1—1914

தேவரீர் தகப்பனுர் அவர்கள் சமுகத்திற்குக் குமாரன் வடிவேலு நமஸ்கரித்து எழுதிக் கொள்வது:—

இவ்விடம் நாமனைவரும் க்ஷேமமாயிருக்கிறோம். அவ்விடத்தில் தேவரீர் தாயார், சகோதரர், சுற்றத்தோர் அனைவரும் க்ஷேமமாயிருக்க ஈஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

எனக்கு இப்பொழுது பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது. நான் தாங்கள் போதித்தபடி என் பாடங்களைக் கிரமமாய்ப் படித்துக் கொண்டு வந்தமையால் பரீட்சை எனக்குக் கடினமாய்த் தோன்றவில்லை. பரீட்சையில் சித்தியடைவேனென்று எதிர்பார்க்கிறேன்.

பரீட்சை முடிந்தவுடன் நான் ஊருக்கு வர உத்தேசித்திருக்கிறேன் ஆகையால் தாங்கள் செலவுக்கு ரூபாய் அனுப்பிவைக்கத் தயவாய்க் கேட்கிறேன். வேறு விசேஷமில்லை. அம்மாளுக்கு என் சுகம் சொல்லவும்.

நான் இனி மேல்வகுப்புச் செல்லவேண்டியிருப்பதால் இனிமேல் அதிக பணம் வேண்டியிருக்கும். இதைப்பற்றி நான் நேரிற் பேசிக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள குமாரன்,

வடிவேலு.

77697

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914

புதிதாய் வெளியிட்டிருக்கும்

வித்தியா மாலிகை என்னும்

STANDARD TAMIL READERS

கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார் (C. L. S.) இப்பொழுது அச்சிட்டு வெளியிட்டிருக்கும் வித்தியா மாலிகை என்னும் புதிய தமிழ் வாசக புத்தகங்கள் பள்ளிக்கூட முகாமைக்காரர் ஆசிரியர் என்னும் இருதிறத்தவராலும் விசேஷமாய்க் கவனிக்கப்படத்தக்கவை. இத்தொடர்ப் புத்தகங்கள் அரிதும் புதிதுமான அநேக விஷயங்களைத் தம்முள் அடக்கியிருப்பதுமன்றி, பள்ளிக்கூடங்களின் பற்பல வகுப்புகளுக்கேற்கச் சிறந்த தெள்ளிய நடையில் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகட்குப் பொருந்தமாறு எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அநேக அழகான படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு புத்தகத்தின் முகப்பிலும் வர்ணந் தீட்டிய முகப்புப் படமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவை இவ்விராசதானியில் மாத்திரமல்ல, தமிழ் வழங்கும் எந்நாட்டிலும் பயன்படவேண்டுமென்பதே நமது கோரிக்கை.

வித்தியா மாலிகை

					அ.	பை.
பாலபாடம் ...	... 32	பக்கம்	...	...	0	9
முதற் புத்தகம்	... 64	,,	...	...	1	9
இரண்டாம் புத்தகம்	... 90	,,	...	...	2	0
மூன்றாம் புத்தகம்	... 100	,,	...	...	2	6
நான்காம் புத்தகம்	... 112	,,	...	...	2	6
ஐந்தாம் புத்தகம் (தயாராகிறது)						

பள்ளிக்கூடத் தமிழ்ப் புத்தகங்கள்

C. L. S. தமிழ் வாசகபுத்தகங்கள் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகளுக்குப் பொருந்தியிருக்கின்றனவென்று வித்தியா தலைவர் (Director of Public Instruction) என்னும் அதிகாரி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

	அ.	பை.
முதற்பாடம்	0	6
முதல் வாசக புத்தகம்	1	6
இரண்டாம் வாசக புத்தகம்	2	0
மூன்றாம் வாசக புத்தகம்	2	0
நான்காம் வாசக புத்தகம்	2	0
ஐந்தாம் வாசக புத்தகம்	2	6
ஆறாம் வாசக புத்தகம்	3	0
ஏழாம் வாசக புத்தகம்	4	0
எட்டாம் வாசக புத்தகம் (புதிதாய் இயற்றப்பட்டது) ...	6	0
ஒன்பதாம் வாசக புத்தகம் (,, ,,) ...	8	0
பெண்களுக்கேற்ற நான்காம் வாசக புத்தகம்	2	0
பன்மணிக்கோத்து முதற்பாகம்	2	0
,, இரண்டாம் பாகம் ...	3	0
இலக்கண வினாவிடை முதற் புத்தகம்	1	0
,, ,, இரண்டாம் புத்தகம்	2	6

1 E. 5 M.